பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி30 வெள்ளிக்கிழமை 14.03.2025 கதிர் 126

## பாசிசவாத ஆளும்தரப்புக்கு எதிராக இணைந்து பயணிப்பதற்குத் தயார்

### பொதுஜன பெரமுன எம்.பி. அறிவிப்பு

ஆளும்தரப்பின்பாசிசவாதஆட்சிக்கு எதிராக அனைவருடனும் இணைந்து பயணிக்க நாம் தயாராக உள்ளோம். அந்தவகையில் ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, சர்வஜன பலய, பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து ஆளும்தரப்புக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்கியுள்ளதாக பொது ஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பின் பொய்கள் வரையறையின்றி தொடர்ந்து கொண்டிருக்கின்றன. பொய் கூறுவதை விடுத்து குடிநீரில் உள்ளடக்கப்பட வேண்டிய குளோரினின் அளவு சரியாகக் காணப்படுகின்றதா என்பதை ஆராய்ந்து வெளிப்படுத்துமாறு வலியுறுத்துகின்றோம். ☞ 2

## கொலைத் திட்டத்தை தீட்டியவர் 5 ஆண்டுகளின் பின்னர் கைது

சீதுவ வெத்தேவ நந்தாராம விஹாரையின் விகாராதிபதியான நெடகமுவ மகாநாம தேரரை பெல்ட் மூலம் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினார் எனக் கூறப்படும் பிரதான சந்தேகநபர் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர் ஒரு முஸ்லிம் பெண்போல் மாறுவேடமிட்டு துபாயிலிருந்து நாடுதிரும்பிக் கொண்டிருந்தபோ-து கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

இந்தக் கொலை செப்டம்பர் 14, 2022 நடந்தது. மாகாநாம தேரரின் ☞ 2

## ஜனாதிபதி அநுர வெறும் வாய்ச் சொல் வீரர் மட்டுமே

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வெறும் வாய்ச்சொல் வீரர் மட்டுமே என்பது தற்போது வெளிப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சியைப் ☞ 8

## ஆஸி, அமெ. தூதர்களை நேற்று சந்தித்த சுமந்திரன்

இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் மற்றும் ஆஸ்திரேலியத் தூதர் ஆகியோர் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரனை நேற்றுச் சந்தித்துப் பேசினர். இந்த இரு சந்திப்புக்களும் கொ-ழும்பில் தனித் தனியாக நடந்தன.

கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய உயர் ஆணையரகத்தில் நண்பகல் நடைபெற்ற சந்திப்பின்போது, சமகால ☞ 8

## இனி இது ரகசியம் அல்ல!

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட உடைவு இன்று நிகழும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தக் கூட்டிலிருந்து சிறீகாந்தா தலைமையிலான தமிழ்த்தேசியக்கட்சி வெளியேறும் என்ற உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கப்படும் என்று அறிய முடிந்தது. அது தொடர்பான அறிவிப்பை கட்சித்தலைவர் சிறீகாந்தா இன்று செய்தியாளர்கள் சந்திப்பில் அறிவிப்பார் என்றும் கூறப்பட்டது.

தமது கூட்டணியின் செயற்பாடுகளுக்கு என யாப்பு, கூட்டுப் பொறுப்பு, கொள்கை உள்ளபோதும் அவற்றை மீறி ரெலோ தன்னிச்சையாக தற்போதைய ஆளும்தரப்பின் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்ததை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிற நிலையிலேயே தமிழ் தேசியக் கட்சி அந்தக் கூட்டிலிருந்து வெளியேறத் தீர்மானித்துள்ளது. அது தொடர்பான அறிவிப்பே இன்று வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கட்சி சங்கு கூட்டணியில் இருந்து சைக்கிள் கூட்டணிக்குத் தாவும் நிலையில் இந்தப் புதிய சைக்கிள் கூட்டணி பற்றிய அறிவிப்பும் இன்றைய தினம் அறிவிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

.................................................

ஏஐ எனப்படும் ஆர்ட்டிபிஷல் இன்ரலிஜென்ட் இப்போது உலகம் முழுவதும் பிரபலம். இந்தச் செயற்கை நுண்ணறிவு அல்லது கணினி அறிவு எதிர்கால உலகில் எந்த வகையிலான மாற்றங்களை ஏற்படுத்தப்போகின்றது என்பது உலகில் மிக முக்கிய விவாதப் பொருளாக இருக்கின்றது. ஓர் உணர்வெழுச்சியோடு, ☞ 2

## மாகாண முறையில் அநுர தரப்புக்கு நம்பிக்கையில்லை. எனவே

# உள்ளூர் கட்சிகளின் தலைமையிலேயே உள்ளூராட்சி சபைகள் இருக்கவேண்டும்

### தமிழ் அரசுக் கட்சித் தலைவர் ஆணித்தரம்

உள்ளூராட்சி சபை என்பது உள்ளூர் மக்களுடையது. உள்ளூர் கட்சிகளின் தலைமையில் உள்ளூராட்சி சபைகள் இருக்க வேண்டும். இதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். அநுர அரசுக்கு மாகாண சபை முறைமையில் அக்கறை இல்லை. அதனாலேயே தாம் நியமித்த ஆளுநர்களையே மாவட்ட அபிவிருத்திக் குழுவில் இணைத் தலைவர்களாக நியமிக்காது தமது கட்சி உறுப்பினரை மட்டும் நியமித்துள்ளனர். இதிலிருந்தே



தமிழர்கள் மீது இந்த ஆளும்தரப்புக்கு அக்கறை எதுவும் இல்லை என்பது ☞ 2

## ஆளும்தரப்பின் மீது மக்கள் முற்றாக நம்பிக்கை இழப்பு

### திஸ்ஸ அத்தநாயக்க திடம்

ஆளும்தரப்பின் மீது மக்கள் முற்றாக நம்பிக்கை இழந்துள்ளனர். அதுவே எமது வெற்றிக்கு ஏதுவான காரணியாக அமையும் என்று ஐக்கி மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற அமர்வுகளுக்கு மத்தியிலும் தேர்தலுக்கான பணிகளை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றோம். கடந்த தேர்தல்களைப் போல அன்றி இம்முறை தேர்தலில் சிறந்த வெற்றியை எம்மால் பெற்றுக் கொள்ள முடியும். ஆளும்தரப்பின் மீது மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர். அதுவே எமது வெற்றிக்கு ஏதுவான ☞ 2

## ரூ. 372 பெறுமதியான மருந்து ரூ. 72 ஆயிரத்துக்கு இறக்குமதி

### கோப் குழு விசாரணையில் அம்பலம்

தற்போது ரூ.372க்கு வாங்கப்படும் இதய அறுவை சிகிச்சைக்கான மருந்து, கடந்த காலத்தில் ரூ.72,000க்கு இறக்குமதி செய்யப்பட்டதாக கோப் குழு விசாரணையில் தெரியவந்திருக்கிறது.

இதனால் பெரும் பணம் வீணாகியுள்ளதாக பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழு (COPE) தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து கோப் குழுவின் முன்பாகக் கருத்து தெரிவித்த தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் ☞ 2

## உள்ளாட்சி மன்றத் தேர்தலில் 1.5 லட்சம் புதிய வாக்காளர்கள்

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் 155,976 பேர் முதல் தடவையாக வாக்களிக்க தகுதிப் பெற்றுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு தேருநர் இடாப்புக்கு அமைவாக கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் நடைபெற்றன. இவ்விரு தேர்தல்களிலும் 17,440,354 பேர் வாக்களிக்க தகுதிபெற்றிருந்தனர்.

2024 ஆம் ஆண்டு தேருடர் இடாப்பின் பதிவுகளுடன், இம்முறை 155,976 பேர் புதிதாக வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இதற்கமைய இம்முறை உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் 1 கோடி 72 லட்சம் 96 ஆயிரத்து 330 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான ஆரம்பக்கட்ட ☞ 2

## பாடசாலை நிகழ்வுகளிலிருந்து அரசியலாளரை தடுக்கவில்லை

### அந்தர் 'பல்டி' அடித்த பிரதமர் ஹரினி

அரசியல்வாதிகள் பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்துகொள்வதைத் தடை செய்வது குறித்துத் தான் எந்தத் தடை உத்தரவுகளையும் பிறப்பிக்கவில்லை என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய பின்வாங்கியுள்ளார்.

அரசியல்வாதிகள் பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதைத் தடை செய்யும் உத்தரவு எதையும் தான் விதிக்கவில்லை என்றும், அரசியல்வாதிகள் அரசியல் ☞ 2

## பணியிடங்களில் பெண்களைக் காக்க சட்டங்கள் மேலும் வலுப்படுத்தப்படும்

### பிரதி அமைச்சர் உறுதியளிப்பு

இலங்கையில் பணியிடங்களில் பெண்களைப் பாதுகாக்கவும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல்களை இல்லா தொழிக்கவும் சட்டங்களை வலுப்படுத்த ஆளும்தரப்பு உத்தேசித்துள்ளது என்று தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்ட தன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

பணியிடங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறை ☞ 8

## இனி இது .....

எல்லாத் துறைகளிலும் இந்த செயற்கை நுண்ணறிவைப்பயன்படுத்துவதில்மனிதர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். எந்தவொரு புதிய தொழில்நுட்பமும் வரும்போது அதன் பாதகத் தன்மைகள் குறித்து அதிகம் கவனம் செலுத்தப்படுவது போன்றே செயற்கை நுண்ணறிவின் பாதகங்கள் குறித்தும் அதிகளவில் பேசப்படுகின்றது என்பதையும் மறுக்க முடியாது.

இப்படி உலகம் ஒரு வழியல் போனால் இலங்கையர்கள் செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டை மற்றொரு உச்ச நிலைக்குக் கொண்டுசெல்வதில்(?)குறியாகஇருக்கிறார்கள் போலுள்ளது. அது தொடர்பான ஒரு தகவலைத்தான் இன்று உங்களுடன் பகிர்ந்துகொள்ளப் போகின்றேன்.

கண்டியில் உள்ள ஒரு முன்னணி ஆண்கள் பாடசாலையின் மாணவர்கள் குழுவொன்று, செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி, அந்தப் பாடசாலையில் இளம் பெண் ஆசிரியை ஒருவரின் நிர்வாண புகைப்படங்களை உருவாக்கியிருப்பதான குற்றச்சாட்டுகள் குறித்த இப்போது கண்டி பிரதேச குழந்தைகள் மற்றும் மகளிர் பணியகம் விரிவான விசாரணையைத் தொடங்கியுள்ளது.

பாடசாலையில் 10 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்கள்தான் இந்த அபத்தமான காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதனை மாணவர்களின் குறும்பு என்பதா, மனஇறுக்கத்தின் வெளிப்பாடு என்பதா, மனநிலைப் பிறழ்வு என்பதா என்று புரியவில்லை. பாலியல் படங்களில் நடிக்கும் நடிகையின் உடலுடன் தமது பாடசாலை இளம்பெண் ஆசிரியையின் முகத்தினையும் சேர்த்து இந்தப் படங்கள் உருவாக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது. செயற்கைநுண்ணறிவைப் பயன்படுத்தி இந்தக் காரியத்தை அவர்கள் செய்துள்ளனனர். வந்தனர்.

இந்த சம்பவம் ஆசிரியரால் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, அவர் கண்டி குழந்தைகள் மற்றும் மகளிர் பணியகத்தில் முறைப்பாடு செய்தார். இதையடுத்து அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பாடசாலைக்குச் சென்று, மாணவர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் மடிக்கணினி மற்றும் இரண்டு அலைபேசிகளைக் கைப்பற்றி விசாரணை களைத்தொடங்கியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

...............................................

ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் விஜேமான்ன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்து, ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டுள்ளார்.

கட்சியின் தலைமையகமான ஷசிறீகொத்தாவில் புதன்கிழமை நடந்த கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களுக்கான கூட்டத்தில் களுத்துறை மாவட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை ரணில் நியமித்ததைத் தொடர்ந்து, விஜேமன்ன வெளியேறியுள்ளார்.

புதன்கிழமைக் கூட்டத்திலேயே விஜேமன்ன இந்த விவகாரம் குறித்து ரணிலிடம் கேள்வி எழுப்பியிருந்தார். ஆனால், அமைதியாக இருக்கும்படி உறுக்கி ரணில்லை அவரை அடக்கி அமரவைத்துவிட்டார். தன்னுடன் பேசாமல் ரணில் இப்படிச் செய்தது துரோகம் என்கிறார் விஜேமன்ன.

எனக்கு தெரியாமலே ஐக்கிய தேசிய கட்சி களுத்துறை மாவட்ட தலைவர் பதவியில் இருந்து என்னை நீக்கி இருக்கிறது. கட்சி தலைமையின் இந்த தீர்மானத்தால் விரக்தியடைந்திருக்கிறேன். அதனால் எதிர்காலத்தில் அரசியல் தீர்மானம் ஒன்றை எடுப்பது குறித்து ஆராய்வேன் என்று ஐக்கிய தேசிய கட்சி களுத்துறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் விஜேமான்ன தெரிவித்தார்.

''ஐக்கிய தேசியக் கட்சி களுத்துறை மாவட்ட தலைவராக நீண்ட காலமாக நான் செயற்பட்டு வருகிறேன். கட்சி வீழ்ச்சியடைந்த நிலையிலும் கட்சியை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறேன். இந்நிலையில் கட்சியின் புதிய மாவட்ட தலைவர்கள் நியமிக்கும்போது எனக்கு அறிவிக்காமலே எனது பெயர் நீக்கப்பட்டு, ராஜித்த சேனாரத்னவுக்கு அந்த நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

ராஜித்த சேனாரத்ன காலத்துக்கு காலம் கட்சிதாவி வருபவர். ஆனால் நான் எப்போதும் இந்த கட்சியுனே இருந்து வந்துள்ளேன். கட்சி மீது நான் வைத்துள்ள விருப்பம் காரணமாக எந்த கஷ்டமான காலத்திலும் கட்சியைவிட்டு சென்றதில்லை. அவ்வாறு நினைத்தே தற்போதும் என்னுடன் கலந்துரையாடாமல் களுத்துறை மாவட்ட தலைவர் பதவியில் இருந்து என்னை நீக்கிவிட்டு ராஜித்த சேனாரத்ன நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த நடவடிக்கையால் விரக்தியடைந்திருக்கிறேன்" என்றார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உள்ளூர் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவாகின்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சிவஞானம் நேற்று இதனைத் தெரிவித்தார். அவர் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தல், மாகாண சபை முறைமை பற்றி எல்லோரும் இப்போது கதைக்கின்றனர். இதுவரையில் மாகாண சபை முறைமை வந்த காலப் பகுதியிலிருந்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக மாகாண ஆளுநர் எல்லா மகாணங்களிலும் இருந்துள்ளார்கள். ஆனால், இப்போது எல்லா மாகாணங்களிலும் ஆளுநர்கள் இணைத் தலைவராக நியமிக்கப்படவில்லை. ஆக எந்தளவுக்கு இந்த அரசு மாகாண சபை முறைமையை விரும்புகின்றது என்பது இதிலிருந்து தெரிகின்றது.

தாங்கள் நியமித்த ஆளுநர்களையே இணைத்தலைவராக இவர்கள் நியமிக்கவில்லை. தாம் நியமித்த தமது கட்சியினஅரசியல்வாதியான தலைவரோடு மட்டும் நிறுத்திக்கொண்டார்கள். இதை யாரும் கவனிக்கவில்லை.

மாகாண நிர்வாகத்தையும் மத்திய நிர்வாகத்தையும் ஒருங்கிணைப்பதற்கான தளமாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இருக்கின்றது. அதற்காகவே மாவட்ட இணைத் தலைவர்களாக ஆளுநர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஆனால், இந்த அரசு அதைச் செய்யவில்லை. இதில் இருந்து இந்த அரசு மாகாண சபை முறைமையில் எவ்வளவு விசுவாசமாக உள்ளது என்பது தெரிகின்றது.

ஆளுநரும் அவர்களது நியமனம், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் கட்சி நியமனம். ஆகவே, மத்திய அரசு தேசிய மக்கள் சக்கியுடையது. இந்த நாடாளுமன்றமும் அவர்களுடையதாக இருக்கலாம். ஆனால், உள்ளூராட்சி சபை என்பது உள்ளூர் மக்களுடையது. உள்ளூர் கட்சிகளின் தலைமையில் உள்ளூராட்சி சபைகள் இருக்க வேண்டும். இதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

இப்போது பலரும் பேசி வருகின்ற பட்டலந்த விவகாரம் அந்தக் காலத்திலேயே மிகப் பெரியளவில் பேசப்பட்டது. அதாவது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இளமைக் காலத்திலே அதற்கும் அவருக்கும் தொடர்பு இருந்ததாகவே பேசப்பட்டு வந்தது.

அந்த ஆணைக்குழு அறிக்கைகூட இவ்வாறான விடயங்களை உள்ளடக்கியதாக இருந்திருக்கின்றது. ஆனபடியால் அவர்களைப் பொறுத்தவரையில் இது காலங்கடந்தது என்றாலும் அதனைப் பகிரங்கப்படுத்தி உண்மையை வெளிக்கொண்டு வந்து அரசு அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது சரி என்றே நான் நினைக்கின்றேன்.

உண்மையைச் சொல்லப் போனால் இந்தப் பட்டலந்த படுகொலை விவகாரம் என்பது அந்த நாட்டிலே இருக்கின்ற அந்த மக்களுக்காக அங்கு செய்கின்ற விடயம். ஆனால், தமிழர்களுக்கு என்ன நடந்தாலும் அது சரி என்று நியாயப்படுத்துகின்ற வேலையைத்தான் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற ஆளும்தரப்-புக்கள் செய்துகொண்டு வந்திருக்கின்றன.

அதுதான் இவர்களது கொள்கையாகவும் அதாவது அவர்களது நிலைப்பாடாகவும் இருக்கின்றது. ஏனெனில் ஆட்கள் மாறுகிறார்களே தவிர காட்சிகள் மாறவில்லை. யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களது சிந்தனையில் மாற்றங்கள் ஏற்படாது.

இந்தப் பட்டலந்த விவகாரம் சம்பந்தமாக ஆட்சியாளர்களிடம் நாங்கள் ஏதும் கோரிக்கை வைக்க வேண்டிய அவசியம் இல்லை. அது குறித்து அவர்களே சண்டையிட்டுக் கொள்வார்கள். அப்படித்தான் இப்போது நடக்கின்றது. இதனைப் பற்றி சிங்கள அரசியல்வாதிகள் பேசிக்கொள்ளட்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவரும் சேர்ந்து இவரும் சேர்ந்து என அவர்கள் எல்லோருமாக இப்படி எத்தனை பட்டலந்தவை எமது மண்ணிலே நடத்தியிருக்கின்றார்கள்?

ஒரு பட்டலந்த பற்றி இப்போது அங்கு அவர்கள் பேசுகின்றார்கள். ஆனால், இப்படி எத்தனை ஆயிரம் பட்டலந்த கொடுமைகள் இங்கு நடந்திருக்கின்றன. இங்கு எவ்வளவு பேர் கொடுமைப்படுத்தப்பட்டும் காயப்படுத்தப்பட்டும் கொல்லப்பட்டும் இருக்கின்றார்கள். அவை எல்லாவற்றுக்கும் விசாரணை நடத்தப்படுமா என்றால் இல்லை.

ஆக பட்டலந்த போல் பற்பல சம்பவங்கள் எங்களுக்கு எதிராகச் செய்யப்பட்டுள்ளமைக்கு நீங்கள் என்ன நடவடிக்கையை எடுக்கப் போகின்றீர்கள் என்றும், உங்களால் ஏன் நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் பல்வேறு கேள்விகளை நாங்கள் எழுப்புகின்றோம் என்றார்.

## ரூ. 372 பெறுமதியான....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம, அப்போதைய விலைச்சான்றிதழில் உற்பத்தியாளர் வழங்கிய விலைகள் குறிப்பிடப்பட்டிருந்தன என்றார்.

2019ஆம் ஆண்டில் அது துல்லியமானதா அல்லது பிறநாடுகளில் இருந்த விலைகளுடன் ஒப்பிடக்கூடியதான தரவுகள் எதுவும் இல்லை என்றும் அவர் கூ-றினார்.

போலி மருந்துகளின் பற்றாக்குறையை உருவாக்கி அவசரகால மருந்துகளை வாங்குவதாகக் கூறி மோசடி செய்யப்பட்டதாக வந்த முறைப்பாடுகள் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணைய அதிகாரிகள் குழுவினால் விசாரிக்கப்படவில்லை என்றும் மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தில் தவறு நடந்துள்ளது என்றும் கோப் குழுவின் தலைவர் மருத்துவர் நிஷாந்த சமரவீர தெரிவித்தார்.

## ஆளும்தரப்பின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணியாக அமையும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகரசபை உள்ளிட்ட ஏனைய மாநகரசபைகளுக்கான மேயர் வேட்பாளர்கள் யார் என்பதை 19 அல்லது 20ஆம் திகதி அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் தேசிய வேட்புமனு தயாரிப்புக் குழு கூடவுள்ளது. அதன் பின்னரே வேட்புமனு தாக்கல் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

ஐக்கிய தேசிய கட்சியுடனான இணைவு குறித்த பேச்சுக்களில் ஏற்பட்ட இடையூறு காரணமாக நான் அதிலிருந்து விலகிவிட்டேன். எனவே அது தொடர்பில் என்னால் எதுவும் கூறமுடியாது. எனினும் இவ்விரு கட்சிகளும் இணைந்து போட்டியிடவேண்டும் என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். அதற்கான வாய்ப்பு இனி ஏற்படுமா என்பதை தற்போது கூற முடியாது என்றார்.

## கொலை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலை தொடர்பில் அதே விகாரையில் வசித்து வந்த மற்றொரு தேரரான ஏகல சுகதசிறி உட்பட ஏழு பேர் சீதுவை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

மகாநாம தேரரைக் கொலை செய்த பின்னர் சந்தேகநபர் தேரரின் ஒரு டிஃபென்டர் மற்றும் வேகன் ஆர் காரைத் திருடிச் சென்று விற்று, பணத்தை துபாயில் இருந்த ஒருவரின் கணக்கில் வைப்பிலிட்டிருந்தார். சந்தேகநபரின் வாக்குமூலங்களின் அடிப்படையில், போலீசார் இரண்டு வாகனங்களையும் கண்டுபிடித்து நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

இந்தக் கொலைத் திட்டத்தை தீட்டியவர் என்று கருதப்படும் நபரே 5 வருடங்களின் பின்னர் இப்போது கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

## பாடசாலை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கங்களுக்காக பாடசாலைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்று மட்டுமேதான் கூறினார் எனவும் அவர் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பிரதமரின் தடை இருந்தபோதிலும் ஆளும் கட்சி அரசியல்வாதிகள் பள்ளிகளில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்கிறார்கள் என்று ஶ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சானக நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியதற்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

'தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வெல கமபஹாவில் நடந்த பாடசாலையில் விழாவில் கலந்து கொள்வதை நாங்கள் பார்த்தோம், பிரதமர் விதித்த தடை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே பொருந்துமா என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம்' என்று அவர் கூறினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் அரசியல்வாதிகள் பாடசாலை நிகழ்வுகளில் கலந்து கொள்வதைத் தடை செய்யும் சட்டம் எதையும் தான் விதிக்கவில்லை என்றார்.

'அனைத்து அரசியல்வாதிகளும் அரசியல் தேவைகளுக்குப் பள்ளி அமைப்புகளைப் பயன்படுத்தக்கூடாது என்ற பொறுப்பு மட்டுமே உள்ளது என்று நான் கூறினேன். ஊடகச் அறிக்கைகள் தவறானவை' என்று அவர் கூறினார்.

இருப்பினும், செப்டம்பர் 26, 2024 அன்று பிரதமர் ஹரிணி அமரசூரியா, அரசியல்வாதிகளை பாடசாலைகளுக்கு அல்லது பாடசாலை நிகழ்வுகளுக்கு அழைக்கவேண்டாம் என்று கல்வி அமைச்சக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருந்தார். இந்தச் சந்திப்பைத் தொடரந்து கல்வி அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், பாடசாலை நிகழ்வுகளுக்கு அரசியல்வாதிகளை அழைப்பதை உடனடியாக நிறுத்துமாறு பிரதமர் ஹரிணி அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியிருந்தார் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் பிரதமர் இப்போது அதனை மறுக்கிறார். தான் உத்தரவிடவில்லை கோரிக்கை மட்டுமே வைத்தேன் என்கிறார்.

## உள்ளாட்சி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் மார்ச் 17 தபால்மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான காலவகாசம் நிறைவடையவுள்ளது.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்துகின்ற நிலையில் மார்ச் 19 ஆம் திகதியுடன் கட்டுப்பணம் செலுத்தல் நிறைவடைகிறது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்பு தொடர்பான அறிவிப்பை எதிர்வரும் வியாழக்கிழமை (20) ஆம் திகதிக்கு பின்னர் வெளியிடுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு 35 நாட்களுக்கு குறையாமல், 49 நாட்களுக்கு அதிகரிக்காமல் பிரசார காலம் வழங்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. மே மாதம் முதல் அல்லது இரண்டாம் வாரத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பாசிசவாத....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொய்கள் சமூகமயப்படுத்துவதை மக்கள் நிராகரிக்க ஆரம்பித்துள்ளனர். மக்களின் பொறுமைக்கான வரையறை நீண்ட காலத்துக்குச் செல்லாது என்பதை நினைவில்கொள்ள வேண்டும். உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் சிறந்த பெறுபேறுகளை பெறுவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

மூத்த அரசியல்வாதிகளின் தலைமையில் தேர்தலுக்கான பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். ஐக்கிய தேசிய கட்சி, ஶ்ரீலங்கா பொதுஜனபெரமுன, சர்வஜனபலய, பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து ஆளும்தரப்புக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

இந்த ஆளும்தரப்பின் பாசிசவாத ஆட்சிக்கு எதிரான அனைவருடனும் இணைந்து பயணிக்க நாம் தயாராக உள்ளோம். எனவே கடந்த தேர்தல்களைப் போன்று இம்முறை தேர்தல் பரப்புரைகளிலும் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்க வேண்டாம் என ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகின்றோம் -என்றார்.

# மாதவனை மேய்ச்சல் தரையில் சட்டவிரோதமாக குடியேறியுள்ளவர்களை வெளியேற்றவேண்டும்

## ஸ்ரீநேசன் எம்.பி. மன்றில் வலியுறுத்து

இன நல்லினக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மாதவனை மேய்ச்சல் தரையில் சட்டவிரோதமான முறையில் குடியேறியுள்ளவர்களை அரசாங்கம் வெளியேற்ற வேண்டும். நீதிமன்றத்தின் தீர்ப்பினை செயற்படுத்த வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது -

முந்தெணியாற்று கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இன்றுவரை நிறைவுபடுத்த ப்படவில்லை. வெளிநாட்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் இந்த கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டம் கைவிட்டு போகுமா என்ற சந்தேகம் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட விவசாயிகளின் மத்தியில் காணப்படுகிறது.

உறுகாமம் - கித்துள் ஆகிய பகுதிகளை இணைத்து முந்தெணியாற்று திட்டத்தை அமுல்படுத்துவதால் 12 சிறுகுளங்களுக்கும், 25 ஆயிரம் ஹெக்டயார் விவசாய நிலங்களுக்கும் நீரை விநியோகிக்க முடியும். அதேபோல் மட்டக்களப்பு அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நிலவும் குடிநீர் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும். அத்துடன் கரடியனாறு விதை உற்பத்தி மையத்துக்கும் நீரை விநியோகிக்க முடியும்.

இதுவரை காலமும் வலதுசாரி கொள்கை உடையவர்கள் ஆட்சியில் இருந்தார்கள். தற்போது இடதுசாரி கொள்கையுடையவர்கள் ஆட்சிக்கு வந்துள்ளார்கள். ஆகவே சமத்துவ அடிப்படையில் அபிவிருத்திகள் பகிரப்பட வேண்டும்.

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரையில் எமது மக்கள் பல தசாப்தகாலமாக கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுவருகிறார்கள். அண்மைகாலமாக அந்த பகுதியில் வெளிமாவட்டங்களை



சேர்ந்தவர்கள் சட்டவிரோதமான முறையில் குடியமர்த்தப்பட்டார்கள்.

மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரையில் சட்டவிரோதமான முறையில் குடியமர்த்தப்பட்டவர்களை உடனடியாக வெளியேற்றுமாறும், இந்த சட்டவிரோத செயற்பாடுகள் இன நல்லினக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இருப்பினும் நீதிமன்றத்தின் தீர்ப்பு செயற்படுத்தப்படவில்லை.

இன நல்லினக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மாதவனை மேய்ச்சல் தரையில் சட்டவிரோதமான முறையில் குடியேறியுள்ளவர்களை அரசாங்கம் வெளியேற்ற வேண்டும். நீதிமன்றத்தின் தீர்ப்பினை செயற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.

# ஓய்வுநிலைக் கௌரவிப்பு

(அப்ராஸ்)

கல்முனை பிரதேச செயலகத்தில் வினைத்திறன் மிக்க சேவையாற்றி அரச சேவையிலிருந்து சிரேஷ்ட தலைமை சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ் ஓய்வு பெற்றுச் செல்வதை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கௌரவிப் பு நிகழ்வு கல்முனைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக கணக்காளர், பிரதி திட்மிடல் பணிப்பாளர் ,நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் கிளைத்தலைவர்கள், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், உதவி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டு ஏ.ஆர்.எம்.சாலிஹ் அவர்களின் ஓய்வு காலம் சிறப்புடன் அமைய வாழ்த்திப் பாராட்டினர்.

மேலும் இதன் போது கல்முனை பிரதேச செயலக நலநோம்பல் அமைப்பினர் ஏற்பாடு செய்த நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வும் இடம் பெற்றது.





# இலங்கை இரசாயனவியல் ஒலிம்பியாட் போட்டியில் மல்வத்தை மாணவி ஜினோதிகா மகத்தான சாதனை

## கிழக்கிலிருந்து அவர் மாத்திரமே தெரிவு

(சகாதேவராஜா)



இலங்கைகனிஷ்ட இரசாயனவியல் ஒலிம்பியாட் போட்டியில் கிழக்கு மாகாணத்தில் இருந்து சம்மாந்துறை வலய மல்வத்தை விபுலானந்த தேசிய பாடசாலை மாணவி சிவரூபன் ஜினோதிகா மகத்தான சாதனை படைத்துள்ளார்.

அவர் இத்தேசிய போட்டியில் மூன்றாவது இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

கிழக்கு மாகாணத்திலிருந்து மாணவி ஜினோதிகா மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் மல்வத்தை விபுலானந்த தேசிய பாடசாலையில் தரம் 11 இல் கல்விகற்று வருகிறார். இவர் மல்வத்தை திருவள்ளுவர்புரம் சிவரூபன் பிரபாஜினி தம்பதியினரின் மூத்த புதல்வியாவார்.

இலங்கை இரசாயனவியல் மன்றம் வருடாந்த பாடசாலை மாணவர்களிடையே மீட்திறன் கூடிய மாணவர்களுக்கு தேசிய இரசாயனவியல் ஒலிம்பியாட் போட்டியை நடத்தி வருகின்றது.

இம்முறை முதல் தடவையாக 17 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு கனிஷ்ட இரசாயனவியல் ஒலிம்பியாட் போட்டியை கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி நடத்தியது.

நாடளாவிய ரீதியில் 8 நிலையங்களில் நடத்திய போட்டியில் 293 மாணவர்கள் தோற்றியிருந்தார்கள் .

கிழக்கில் இருந்து 8 மாணவர்கள் கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இந்துப் போட்டியில் தோற்றிருந்தார்கள்.

போட்டியில் மாணவி ஜினோதிகா மாத்திரமே தேசிய ரீதியில் மூன்றாவது இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இவர்களுக்கான சான்றிதழ்கள் பதக்கங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் கொழும்பில் வைத்து வழங்கப்பட இருக்கின்றது என இரசாயனவியல் மன்றம் அறிவித்துள்ளது.

கிழக்குமாகாணத்திற்கும்,சம்மாந்துறை வலயத்திற்கும், மல்வத்தைக்கும் மீண்டும் பெருமை சேர்த்த மாணவி சிவரூபன் ஜினோதிகாவை சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமார் மற்றும் கல்விச்சமூகத்தினர் பாராட்டி வருகிறார்கள் .

இவர் ஏலவே, தேசிய கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகளிலே பல பதக்கங்களை பெற்று சாதனை படைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மலையகக் கல்வி; இடைவெளிகளை நிரப்புதல்

கல்வி என்பது ஒரு அடிப்படை உரிமை. சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரு சக்திவாய்ந்த கருவி. இருப்பினும், கணிசமான தமிழ் மக்கள் வசிக்கும் இலங்கையின் மலையகப் பகுதியில், கல்வியறிவு மற்றும் அணுகலை மேம்படுத்துவதற்கான அரச முயற்சிகள் போதுமானவையாக இல்லை, கல்வி தொடர்ந்து கணிசமான சவால்களை எதிர்கொள்கிறது. அனைத்து குடிமக்களுக்கும் சம வாய்ப்புகளை உறுதி செய்வதற்கு இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பது அவசியம்.

இது குறித்த குரல்கள் இந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தில் அதிகளவில் ஒலித்ததைக் கேட்க முடிந்தது. மலையகக் கல்வியில் மிகவும் அழுத்தமான கவலைகளில் ஒன்று போதுமான உள்கட்டமைப்பு இல்லாததும் ஆசிரியர்கள் பற்றாக்குறையுமாகும். தோட்டப் பகுதிகளில் உள்ள பல பள்ளிகள் போதுமான வகுப்பறைகள், காலாவதியான வசதிகள் மற்றும் கல்விப் பொருட்களின் பற்றாக்குறையுடன் இயங்குகின்றன. இந்தப் பகுதிகளின் தொலைதூரத்தன்மை பிரச்சினையை மேலும் அதிகரிக்கிறது, ஏனெனில் மாணவர்கள் பெரும்பாலும் பள்ளியை அடைய நீண்ட தூரம் நடக்க வேண்டியிருக்கும். இந்த நிலைமை அதிக இடைநிற்றல் விகிதத்திற்கு பங்களிக்கிறது, குறிப்பாக பெண்கள் மத்தியில், கல்வியை விட வீட்டுப் பொறுப்புகளுக்கு முன்னுரிமை அளிக்க கூடுதல் சமூக அழுத்தங்களை எதிர்கொள்கிறது.

தகுதிவாய்ந்த ஆசிரியர்களின் பற்றாக்குறை மற்றொரு பெரிய சவால். மோசமான வேலை நிலைமைகள் மற்றும் போதுமான ஊக்கத்தொகை இல்லாததால் மலையகப் பள்ளிகள் அடிக்கடி அனுபவம் வாய்ந்த கல்வியாளர்களைத் தக்கவைத்துக் கொள்ள போராடுகின்றன. பல ஆசிரியர்கள் தொலைதூரப் பகுதிகளில் பணியமர்த்தப்பட தயங்குகிறார்கள், இது சீரற்ற கல்வித் தரத்திற்கு வழிவகுக்கிறது. மேலும், கற்பித்தல் ஊடகம் ஒரு கவலையாகவே உள்ளது. தமிழ் வழிப் பள்ளிகளில் பெரும்பாலும் தரமான பாடப்புத்தகங்கள் மற்றும் வளங்கள் கிடைப்பதில்லை, இதனால் நகர்ப்புறங்களில் உள்ள மாணவர்களுடன் ஒப்பிடும்போது மாணவர்கள் பாதகமான நிலையில் உள்ளனர்.

சமூகப்பொருளாதாரகாரணிகளும்கல்விஏற்றத்தாழ்வுகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மலையகக் குடும்பங்களில் பெரும்பாலானவை தேயிலைத் தோட்டத் தொழிலைச் சார்ந்துள்ளன, இது குறைந்த ஊதியத்தை வழங்குகிறது மற்றும் கல்விமுதலீட்டிற்குசிறியஇடத்தைவிட்டுச்செல்கிறது.பொருளாதார நெருக்கடிகள் சில குழந்தைகள் தங்கள் குடும்பங்களை ஆதரிக்க பள்ளிப்படிப்பைத் தவிர்க்க கட்டாயப்படுத்துவதால், குழந்தைத் தொழிலாளர் ஒரு கவலையாகவே உள்ளது. கூடுதலாக, மலையகக் குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு அறிவாற்றல் வளர்ச்சி மற்றும் கற்றல் விளைவுகளை எதிர்மறையாக பாதிக்கிறது, இது கிராமப்புற மற்றும் நகர்ப்புற மாணவர்களுக்கு இடையிலான இடைவெளியை மேலும் விரிவுபடுத்துகிறது.

இந்த சவால்கள் இருந்தபோதிலும், முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. அரச முயற்சிகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை தலையீடுகள் பாடசாலை வசதிகள், உதவித்தொகைதிட்டங்கள்மற்றும்தொழில்பயிற்சிவாய்ப்புகளில் முன்னேற்றங்களுக்கு பங்களித்துள்ளன. இருப்பினும், இன்னும் விரிவான அணுகுமுறை அவசியம். சிறந்த ஆசிரியர் ஆட்சேர்ப்பு, உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு இலக்கு வைக்கப்பட்ட நிதி ஆதரவு ஆகியவற்றில் கொள்கைகள் கவனம் செலுத்த வேண்டும்.

மலையக இலங்கையில் கல்வி சமூக மேம்பாட்டிற்கான முக்கிய உந்துதலாக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இந்த முறையான பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதன் மூலம், புவியியல் அல்லது சமூகப் பொருளாதார பின்னணியைப் பொருட்படுத்தாமல், ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வி மற்றும் சிறந்த எதிர்காலத்திற்கான வாய்ப்பைப் பெறுவதை இலங்கை உறுதி செய்ய முடியும்.

# ஊரும் அனுராவோடு?

என். சத்தியமூர்த்தி

தெரிந்தோ, தெரியாமலோ, 'நாடு அனுரவிற்கு, ஊர் எங்களுக்கு' என்ற கோசத்துடன் தமிழ் அரசு, வடக்கு- கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலை சந்திக்க இருப்பதாக கட்சியின் பொதுசெயலாளர் சுமந்திரன் அறிவித்துள்ளார். அத்துடன், வழமைபோல், தலைநகர் கொழும்பில் வெள்ளவத்தை வாக்காளர்களை முன்னிறுத்தி, போட்டியிடுவது குறித்து ஆலோசிக்க இருப்பதாக முதலில் கூறி, மீண்டும் ஒரு முறை கட்சி அந்த முயற்சியைகைவிட்டுள்ளது.




இது தவிர, வவுனியாவில் கூடிய கட்சி மத்திய குழுக் கூட்டத்தில், உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர் குழுக்களை மாவட்ட தலைமைகளே, மத்திய தலைமையுடன் கலந்தாலோசித்து முடிவு செய்துகொள்ளலாம் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதுவே, அடிப்படையில் நடைமுறை சாத்தியமானது. இதுவே, மாவட்ட தலைமைகளுக்கு ஒரு செல்வாக்கை உருவாக்கி, கட்சியின் அடுத்த தலைமுறைத்தலைவர்களைஉருவாக்கவும் வழிசெய்யும்.

அதுபோன்றே, தேர்தலில் வெல்லும், கட்சி உறுப்பினர்களும் அடுத்த கட்டத் தலைமைகளை உருவாக்குவதற்கு அச்சாணியாக இருப்பார்கள். இதுவும், அனைத்துத் தமிழ் கட்சிகளுக்கும், மலையக, முஸ்லீம் கட்சிகளுக்கும் பொருந்தும். ஆனால், கடந்த பல தசாப்தங்களாக, நிலைமை இவ்வாறு இருந்தும், அடுத்தடுத்த தலைமுறைத் தலைவர்கள் உருவாகி மேல்மட்டங்களில் கோலோச்ச முடியவில்லை. அதற்கு, ஒவ்வொரு கட்சியிலும் பழம் தின்று கொட்டை போட்ட பழம்பெருச்சாளிகள் இடம்கொடுக்கவில்லை.

இந்த முறை என்னவோ, தமிழ் அரசுக் கட்சியில் மட்டும் மத்திய தலைமையில் புதிய குருதி பாயந்துள்ளதாக ஒரு தோற்றம் உருவாகி உள்ளது. அது, சம்மந்தன் மற்றும் மாவை சேனாதிராசா என்ற இரு மூத்த தலைவர்களின் மறைவு காரணமாகத் தோன்றிய காலி இடங்களே. அவற்றை நிரப்பமுடியாத வெற்றிடம் என்று கூறிவிடமுடியாது.

இந்த இரு தலைவர்களுக்கும், தாங்கள் செல்லகாசாகி வருகிறோம், புதிய தலைமுறை வாக்காளர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பது புரிந்தேஇருந்தது. ஆனாலும், அடுத்தடுத்த தலைமுறையினருக்கு இடம்விடாமல் வழியை அடைத்துக்கொண்டு நின்றார்கள்.

இன்றும், தமிழ் அரசு தவிர்த்த பிற கட்சிகளில், இனப்போர் காலத்திற்கும் முந்தைய தலைமைகளே அரசோச்சுகிறது. அவர்களில் பலரும் செல்லாகாசாகி, அதன் காரணமாகவே, அந்தந்த கட்சிகளையும் காணாமல் ஆக்கி வருகிறார்கள்.

## நிறை-குறைகள்

இதில், தமிழ் அரசுக் கட்சி மட்டும் வேறு வழியில் அதே இலக்கை நோக்கி தொடர்ந்தும் சென்று கொண்டிருக்கிறது. சுமந்திரன், சிறீதரன் தரப்புகளோடு, இப்போது கட்சியின் தலைவர் சிவஞானமும் தனியாவர்த்தனம் வாசிக்க தயாராகி வருகிறார் என்று எண்ண இடமிருக்கிறது.

வேறொன்றுமில்லை என்றாலும், தொடர்ந்துநடைபெறவிருக்கும்மாகாண சபை தேர்தலில் தன்னை முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்தி சிவஞானம் இப்போதே அரசியல் செய்வாரோ என்ற கிலி பலரிடமும் உள்ளது. உண்மை என்னவோ, இன்றுள்ள தமிழ் அரசியல் தலைவர்களில் வட மாகாண முதலமைச்சராவதற்கான தகுதி அவருக்கு அல்லது அவருக்கே உள்ளது. ஆனாலும், வயோதிகம் மற்றும் மத்தியில் ஆளும் ஜேவிபி தலைமையோடு தலைநகர் அரசியலிலாவது ஒட்டாடி உறவாடி அரசியல் செய்யாதது போன்றவை அவருக்குப் பாதகமான விடயங்கள்தான்.

அவருக்குதலைநகர் அரசியல்தெரியாத காரணத்தினால், அங்கு ஆளும் கட்சி, எதிர் கட்சி, எதிரிக் கட்சி தரப்புகளில் தலைவர்களையும் தலைமைகளையும் தெரியாது. இதனால், சிவஞானம் சோரம் போய்விட்டார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவதற்கு சில காலம் ஆகலாம். தற்போது, ஆட்சிமையில் இருக்கும் பல்வேறு தமிழ் கட்சித் தலைவர்கள் மீது அத்தகைய குற்றச்சாட்டு தொடர்ந்து வைக்கப்பட்டு வருவது நிதர்சனம்.

சிவஞானத்திற்கு அரசு இயந்திரம் எப்படிச் செயல்படும், எங்கே தட்டினால், என்ன ஒலி எழும் என்பதெல்லாம் மூத்த அரசு ஊழியராக இருந்த காரணத்தினால் தெரியும், புரியும். அவ்வளவுதான். அதேநேரம், அந்த செயலறிவு இல்லாத காரணத்தினால் மட்டுமே அறிவுஜீவி என்று கருதப்பட்ட நீதியரசர் விக்னேஸ்வரனால், வட மாகாண முதல்வராக மிளிர முடியவில்லை.

விக்னேஸ்வரன் தனது பலவீனத்தை இட்டுக்கட்டி அதனை அரசியல் பலமாக, கொள்கை முழக்கங்களாக அவ்வப்போது மாற்றினார். தனக்கு அரசு செயல்பாடு குறித்துத் தெரியவில்லை, என்று கேட்டுப் படித்துக்கொள்ள சுயகௌரவம் இடம்கொடுக்கவில்லை. எனவே, முதலமைச்சரான பிறகும், கொள்கை அரசியல் (மட்டும்) செய்துவந்தார். மாகாணசபைக்கூட்டங்களில், கொழும்பு தமிழ் சங்க கூட்டங்களுக்கு இணையாக அரசியல் (மட்டும்) பேசினார்.

போதாதற்கு, மாகாண சபைக் கூட்டங்களில், மத்திய அரசையும்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ஊரும்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

தென்னிலங்கை தலைமைகளையும் எதிர்த்து, அடிக்கடி தீர்மானங்கள் நிறைவேற்றி வந்தார். அதுதான் மாகாண சபையின் ஒரே வேலை என்று தானும் நம்பி, தன்னைச் சுற்றியிருந்த ஜால்ராக்களையும் நம்ப வைத்தார்.

இதில் ஒரு பகுதியாகத் தான் (மட்டுமே) அப்போதைய தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர், அங்கத்துவக் கட்சியின் வேட்பாளர் இல்லை என்று விதண்டாவாதம் செய்தார். கடைசியாக, வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதையாக, தன்னை நேரடி அரசியலுக்கு கொண்டு வந்த சம்மந்தன் தலைமைக்கே ஆப்படிக்க முயற்சி செய்து, அதிலும் தோற்றுப்போனார்.

இதுபோன்ற சூழ்நிலைகளால் தோல்வியுற்றது, விக்னேஸ்வரன், சம்மந்தன் போன்ற தனி மனிதர்கள் அல்லர். அவர்கள் சார்ந்திருந்த அரசியல் அமைப்புகள் மட்டுமல்ல. அனைத்து தமிழ் மக்களும்தான்.

இந்த உள்குத்துகள் தொடர்ந்து ஒவ்வொரு அலகாக, ஒவ்வொரு அமைப்பிலும், கட்சியிலும் தோன்றி, வேரூன்றி உள்ளதால் மட்டுமே, சுமந்திரன் போன்றோர், 'நாடு அனுராவுக்கு, ஊர் எங்களுக்கு' என்று மீண்டும் மீண்டும் அறிக்கை -- இல்லையில்லை, அறிக்கை போர் தொடுக்க வேண்டிய கட்டாயம் தோன்றி உள்ளது.

## கால-நேர அவகாசம்

சரி, இன்றைய நிலைமைதான் என்ன? வழமை போல், அனைத்து தமிழ் அரசியல் தலைமைகளும் ஒற்றுமை குறித்து பேசுவதற்காக முன்னெடுப்புகள் செய்தே காலத்தைக் கழித்தார்கள். தற்போது, கொள்கைகளுக்கும் (!) தனிநபர் ஈகோவிற்கும் அப்பால், சரியான அனைத்து தமிழர் கூட்டணி ஒன்றை அமைத்து, அதன் மூலம் ஒரே அணியாக உள்ளாட்சி தேர்தல்களை சந்திப்பதற்கான கால-நேர அவகாசம் இல்லை.

உண்மையென்னவோ, இன்றளவும், தமிழ் அரசு கட்சிக்குள் சுமந்திரன், சிறீதரன் அணியினர் ஒரு சேர களப்பணி ஆற்றுவார்கள் என்று யாரும் அறுதியிட்டுக் கூறமுடியாது என்பதுதான். இப்போதே தேர்தல் திகதிக்குள் யாரெல்லாம் கட்சி தாவப்போகிறார்கள் என்ற செய்திகளுக்கு, வடக்கு தமிழ் பத்திரிகைகள் தனியாக ஒரு பகுதியை தொடக்கிவிடலாம். அதிலும் குறிப்பாக விடுபட்ட தேர்தல் ஆர்வலர்களின் எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும் இவ்வாறுதான் வெளிப்படும். உதாரணத்திற்கு வேறு காரணங்களுக்காக ரெலோவில் இருந்து வெளியேறிய விந்தன், தமிழ் அரசுக் கட்சி, எதிர்வரும் தேர்தலில் வீறு நடை போடும் என்று கணித்து கூறிஉள்ளார்.

## உரித்தான உரிமை

என்ன, பிரிவதும் வசைபாடுவதும் கூட அனைத்துத் தமிழ் கட்சிகளுக்கும் உரித்தான உரிமையே'. எப்போது, பொது வேட்பாளர் என்று ஒருவரை ஜனாதிபதி தேர்தலில் களமிறக்கிவிட்டு அவருக்கு முழு மனதோடு தேர்தல் பணி செய்யவில்லையோ, அப்போதே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தலைமைகளின் இலட்சணம் புரிந்துவிட்டது. இப்போதும், அதுவே தொடருகிறது.

ஒன்பது கட்சிகளை உள்ளடக்கி உள்ளாட்சி தேர்தலில் களமிறங்கிய கூட்டணியில், இப்போது எத்தனை கட்சிகள் தொடர்ந்து அங்கத்துவம் வகிக்கின்றன என்ற கேள்விக்கான விடை அந்த ஆண்டவனுக்கே தெரியுமா என்பதுகூடத் தெரியவில்லை. இதற்கு அப்பால், நாடாளுமன்ற தேர்தலில், தமிழ் அரசுக் கட்சியில் உள்குத்து அதிகமாக இருந்தது என்பது உண்மை. ஆனால், இதை விட கேவலமாக, கூட்டணியின் உறுப்பு கட்சிகள் தங்களது வாக்கு வங்கி தங்களது கட்சியை சார்ந்த வேறு எந்த வேட்பாளர்களுக்கும் சென்றுவிடக்கூடாது என்பதில் திடமாக இருந்தார்கள் என்பதும் உண்மை. அவர்களில் ஒரு சிலராவது நாடாளுமன்ற தேர்தலில் தோல்வி அடைவதற்கு இதுவும் ஒரு காரணம் எனலாம்.

இன்னும் சொல்லப்போனால், தமிழ் அரசு கட்சி ஆகட்டும், அல்லது ஜனநாயகக் கூட்டணி ஆகட்டும், இரண்டு தரப்பினருள்ளும் ஓர் அணியாக உள்ளாட்சி தேர்தலை சந்திக்கும் மனபக்குவம் யாருக்கும் இல்லை என்பதே இன்றளவும் உண்மை. இதுவே, அடிமட்ட தொண்டர்களுக்கும் பொருந்தும்.

இவர்களுக்கு அப்பால், தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் கஜேந்திரகுமார் தனது 'சைக்கிள்' சின்னத்தில் தேர்தலை எதிர்கொள்ள புதிய பங்காளிக் கட்சியனரைத் தேடிவருகிறார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. கஜேந்திரகுமார் மட்டுமே, அந்த அணியின் ஏகபோக தலைவர் என்பதே அவர்களின் பலமும், பலவீனமும்கூட.

மற்றபடி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணியில், நிறுவன தலைவரான விக்னேஸ்வரன் தேர்தல் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டதாக அறிவித்து விட்டாலும், தொடர்ந்து கட்சி அரசியலை குழப்பமாட்டார் என்பது நிச்சயம் இல்லை. அவ்வாறில்லை என்றால் இரு நாட்டு மீனவர் பிரச்சினை குறித்து, தமிழ் நாடு முதல்வர் மு க ஸ்டாலினுக்கு அவர் எப்போதும் இல்லாத வகையில் இப்போது கடிதம் எழுதி இருக்கமாட்டார்.

மாறாக, தனது கட்சியின் தலைமைப் பொறுப்பை செயல்படுத்துவார் என்று விக்னேஸ்வரனே அடையாளம் காட்டி, தனது வழமையான குடியிடமான கொழும்புவிற்கு இடம்பெயர்ந்த பின்னர், மணிவண்ணனுக்கே அந்த பொறுப்பை அல்லது பெருமையை கொடுத்திருப்பார். கொடுத்திருக்க வேண்டும். ஆனால், அவர் அவ்வாறு செய்யவில்லை.

இந்தப் பின்னணியில், தமிழ் அரசியல் தரப்புகள் தொடர்ந்து உள்ளாட்சி தேர்தல்களையும் தனித்தனியாக, அதுவும் உள்கட்சி உள்குத்துகளுடனே சந்திப்பார்களேயானால், சுமந்திரன் கூற்றிற்கு எதிராக, 'நாடு மட்டும் அனுரவோடு அல்ல. ஊரும் அனுரவோடுதான்' என்ற நிலைமையே தோன்றும். தொடரும்!



# மன இறுக்க உளப் பாதிப்புக்களை கைபேசி வழியாக எச்சரிக்க கருவி

## பிரான்ஸில் வதியும் சுஜீவன் முருகானந்தம் அபரிமித சாதனை

புலம்பெயர் ஈழத்தமிழர்கள் மூன்றாவதுதலைமுறையினைஎட்டிவிட்ட நிலையில், இளைய ஈழத்தலைமுறை பல்வேறு துறைகளிலும் சாதனை புரிந்து வருகின்றது. அந்தவகையில் பிரான்ஸின் மருத்துவத்துறையில் புதிய கருவியொன்றினைஉருவாக்கிகவனத்தை பெற்றுள்ள சுஜீவன் முருகானந்தம் எனும் உயர்நிலை மாணவர் உலகத் தமிழர்களின் தேர்வு வாக்குக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

மன இறுக்க உளப் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ள 4-12 வயதுக்குட்பட்ட இளம் சிறார்களின் அக-மன நிலையை உணர்ந்தறியும் வகையில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கைவளையல் கருவியொன்றினை உருவாக்கியுள்ளார்.

இக்கருவியூடாக அச்சிறார்களுக்கு ஏற்படுகின்ற மன இறுக்க உளப் பாதிப்புக்களைஉடனடியாகவேகைபேசி வழியாகஎச்சரிக்கும்திறன்கொண்டதோடு ஏற்படுகின்ற பாதிப்புக்களை முறையாக ஆவணப்படுத்தும்திறன்கொண்டதாகவும் இக்கருவி உருவாக்கம் பெற்றுள்ளது.

நாடளாவியரீதியில் இத்துறைசார்ந்து 81 பேர் இதனை உருவாக்கியிருந்த நிலையில் இவர்களில் 6 பேர் தேசிய அளவிலான இறுதித்தேர்வுக்கு சென்றுள்ளனர்.

ஒவ்வொருவரது உருவாக்க கருவியின் பயன்பாடு அதன் அவசியம் குறித்தான ஆய்வுகளின் அடிப்படையில் மூன்று கட்டங்களாக இறுதிச்சுற்றில் கருவி தேர்வு செய்யப்படவுள்ளது. இதில் மூன்றாம் நிலையாக பொதுமக்களும் தங்களுக்கு தேவையான கருவியினை தேர்வு செய்ய முடியும்.





அந்தவகையில் இவர்களில் ஒருவராக சுஜீவன் முருகானந்தம் அவர்கள் 'கோர் லெகர்' எனும் பெயரில் தனது கருவியை உருவாக்கியுள்ளார்.

எதிர்வரும் மார்ச் 14ம் தேதி வெள்ளிக்கிழமை ஐரோப்பிய நேரம் மதியம் 12 மணிக்கு முன்னராக இணையத்தளத்துக்கு தேர்வுக்கான வாக்களிப்பினை மேற்கொள்ள வேண்டும்.

மின்னஞ்சல் பதிவுடன் சுஜீவன் முருகானந்தம் அவர்கள் உருவாக்கியுள்ள 'கோர் லெகர்" எனும் கருவினை தேர்வு செய்யும்பட்சத்தில் ஈழத்தமிழர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் வெற்றியாளராக தேர்வு செய்யப்படுவார்.

1995 யாழ்ப்பாண இடப்பெயர்வுக்கு பின்னராக கிளிநொச்சியில் தற்காலிகமாக வாழ்ந்து அங்கிருந்து 2000 ஆண்டுகளில் 7வயதில் பிரான்ஸில் கால்பதித்த இந்த மாணவரே சுஜீவன் முருகானந்தம் ஆவார்.

# கிழக்கு மாகாண தாதியர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும்

## கிழக்கு ஆளுனர் உத்தரவாதம்

(ஹஸ்பர்)

கிழக்குமாகாணதாதியர்கள்எதிர்நோக்கும்பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரட்ணசேகர உறுதியளித்தார்.

ஆளுநருக்கு அகில இலங்கை தாதியர் சேவைகள் சங்கத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று, புதன்கிழமை திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் தாதியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தாதியர் சேவைகள் சங்கம் ஆளுநரிடம் முன்வைத்த போதே, அவற்றை தீர்ப்பதற்கு உடன்பாடு எட்டுப்பட்டது.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டி. ஏ. சி. என். தலங்கம, ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர். டி.ஜி.எம். கொஸ்தா மற்றும் அதிகாரிகள் குழு கலந்து கொண்டன்ராஜ், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர். டி.ஜி.எம். கொஸ்தா மற்றும் அதிகாரிகள் குழு கலந்து கொண்டன.



# உலக குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு யாழ். நகரத்தில் விழிப்புணர்வு நடைபவனி




உலக குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு நேற்று (வியாழக்கிழமை) யாழ்ப்பாணத்தில் மாபெரும் விழிப்புணர்வு நடைபவனி நடைபெற்றது.

இதன்போது விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் சிவன் கோவிலுக்கு முன்பாக ஆரம்பமான நடைபவனி காங்கேசன்துறை வீதியூடாக சென்று, பின்னர் வைத்தியசாலை வீதியூடாக எஸ்.ரி.எஸ் வைத்தியசாலையை அடைந்தது. பின்னர் வைத்தியசாலையில் விழிப்புணர்வு செயலமர்வும் நடைபெற்றது.

குளுக்கோமாஎன்பதுகண்ணில்பாதிப்பைஏற்படுத்தக்கூடிய ஒரு நோயாகும். இந்த நோயினை ஆரம்பத்தில் இனங்கண்டு சிகிச்சை பெற்றுக்கொள்வதன் மூலம் நோயிலிருந்து குணமடைய முடியும். எனவே, இந்த நோய் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த நடைபவனி அமைந்திருந்தது.

லயன்ஸ் கழகம் மற்றும் எஸ்.ரி.எஸ் வைத்தியசாலையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# மக்களின் காணிகளை அரச திணைக்களங்கள் திருடுவதாக ரவிகரன் சபையில் குற்றச்சாட்டு

## புலிகளால் வனவளம் பாதுகாக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டு



முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட வன்னிப்பகுதிகளில், வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்கள் மக்களின் விவசாய மற்றும், குடியிருப்புக் காணிகளை அத்துமீறி திருடியுள்ளதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நாடாளுமன்றில் குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார்.

அதேவேளை இவ்வாறு மக்களின் காணித்திருட்டில் ஈடுபடும் திணைக்களங்ளில் ஒன்றான வனவளத் திணைக்களம் வன்னியில் இடம்பெறும் சட்டவிரோத காடழிப்புச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி, வனவளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் தெரிவித்தார்.

கடந்த 2009 ஆம் இற்கு முன்பு மரக்குற்றிகளால் நிரப்பப்பட்ட கனரக வாகனங்களைக் கண்டதில்லை எனவும், மரம் அரிகின்ற இயந்திர வாள்களின் கொடூர ஓசையைக் கேட்டதில்லை எனவும் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், வனவளத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் பாதுகாத்தனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற 2025ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்

தலைமைதாங்கும் உறுப்பினரே, காணிவிடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர், பிரதிஅமைச்சர் அவர்களே, மக்களினதும், எனது கருத்துக்களையும் குறிப்பிடுகின்றேன்.

முன்னைய ஆட்சியில் திணைக்களங்களால் காணித்திருட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தங்களுடைய ஆட்சியில் இவ்வாறான காணித் திருட்டுக்கள் நீக்கப்படவேண்டும்.

வன்னிப்பெருநிலப்பரப்பு எப்போதும் காடுகளை அதிகமாகக்கொண்ட நிலப்புரப்பாகவே காணப்படுகின்றது. இங்குள்ள மக்களின் வாழ்வு தொன்று தொட்டு இயற்கையோடு இணைந்ததொன்றாகவே காணப்படுகின்றது. இங்குள்ளமக்கள் என்றும் இயற்கையோடு முரண்பட்டு கொண்டதில்லை. காடுகளை அழித்ததில்லை. 2009 ஆம் ஆண்டுவரை வெட்டப்பட்ட மரக்குற்றிகளால் நிரப்பப்பட்ட கனரக வாகனங்கள் எம் வீதியால் சென்றதை நாம் கண்டதில்லை.

மரம் அரிகின்ற இயந்திர வாள்களின் கொடூர ஓசையை நாம் கேட்டதில்லை. 2009 ஆம் ஆண்டு வரை வனவளத்திணைக்களமும், வனஜீவராசிகள் திணைக்களமும், இங்கு எமது இடத்தில் இருக்கவில்லை. ஆனாலும் விடுதலைப்புலிகளின் வனவளப்பிரிவு இருந்தது. இயற்கையை நேசித்த வன்னியர்களின் வாழ்க்கைமுறை இருந்தது. இதனால் வனப்பகுதிகள் அழிக்கப்படவில்லை. காடுகள் அழிக்கப்பட்டு மரங்கள் வெட்டு மரங்களாகவும், விறகுத்தேவைகளுக்காகவும் பெருநகரங்களை நோக்கி ஏற்றிச்செல்லப்படவில்லை. காடுகள் மிகவும் கவனமாக காவல் செய்யப்பட்டன.

கடந்த 2010ஆம் ஆண்டிலும் அதன்பின்னரும்தான் வனவளத்திணைக்களத்தினதும், வனஜீவராசிகள் திணைக்களத்தினதும், நிர்வாகம் இங்கு நிலைநிறுத்தப்பட்டது.

சபாநாயகர் அவர்களே இதன் பின்னர்தான் வன்னிப்பெருநிலப் பரப்பின் காடுகள் குறையாடப்பட்டன.

மன்னாரில் முசலி உட்பட குறிப்பிட்ட சில இடங்களிலும், வவுனியாவில் பம்பைமடு உள்ளிட்ட சிலகுறிப்பிட்ட இடங்களிலும் அடர்காடுகள், ஒதுக்கப்பட்ட வனப்பகுதிகள் ஈவுஇரக்கமற்று கனகரக இயந்திரங்களால் மூர்க்கத்தனமாக சிதைக்கப்பட்டன. இவைகள் வனவளத்திணைக்களத்தின் அபகரிப்புக்கள் அல்லது, திருட்டுக்களாகவே கருதப்படவேண்டும்.

2009 இன்முன்பு வன்னிப்பெருநிலப் பரப்பில் வனவளம் எவ்வாறு பாதுகாக்கப்பட்டது என்பதையும், 2009 இன்பின்பு வனப்பகுதிகள் எவ்வாறு சூறையாடப்பட்டன என்பதையும் அறியமுடியும்.

இன்றுவரை வனவளத்திணைக்களத்தின் செயல்பாடுகள் மிகவும் ஊழல் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. இதேபோலத்தான் வனஜீவராசிகள் திணைக்களமும் இங்கு செயற்பட்டுவருகின்றது. இவ்வாறு வனப்பகுதிகள், இயற்கை வாழ்விடங்கள் என்பவை சூறையாடப்படுவதற்கு காரணமாக இருக்கும் இத்திருட்டுத் திணைக்களங்கள் 2010 இன் பின் எங்கள் வீட்டுமுற்றங்களையும் வயல் நிலங்களையும், தோட்டந் துரவுகளையும், ஏன்... வீதிகளையும் இடுகாடுகள், சுடுகாடுகளையும்கூட திருடத்தொடங்கி விட்டார்கள்.

2009ஆம் ஆண்டின் பின்னர் தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்களையும், விதிகளையும் புறக்கணித்து மாவட்டச்செயலாளருக்கோ, பிரதேசச் செயலாளருக்கோ தெரியப்படுத்தாது, நிலஅளவைத் திணைக்களத்தின் ஊடாக வரைபடங்களையும் பெற்றுக்கொள்ளாமல், முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 167,487 ஏக்கர் நிலப்பரப்பு வனவளத்திணைக்களத்தால் வனப்பிரதேசமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச்செயலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அவ்வறிக்கையின்படி 1983ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டுவரை உள்நாட்டுப்போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் குடியிருப்புக்காணிகள், முத்தையன் கட்டுக்குள நீர்ப்பாசனத்திட்டம், தண்ணிமுறிப்புக்குளநீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் மக்களுக்கு பிரித்து வழங்கப்பட்ட வயல்நிலங்கள், இன்னும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின்நிர்வாகத்தின்கீழ் இருக்கும் நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும், அவற்றின்கீழ் இருக்கும் வயல்நிலங்கள் என்பன வனவளத்திணைக்களத்தால் விதிமுறைகளை மீறிய வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் ஒதுக்கப்பட்ட வனவளப்பிரதேசங்களாக வர்த்தமானப்படுத்துப்பட்டு இருக்கின்றன என மாவட்ட புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதே போல் 2009 ஆம் ஆண்டின் பின்னர் வனஜீவராசிகள் திணைக்களத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசச்செயலாளர் பிரிவில் 10,119 ஏக்கர் நிலப்பரப்பு நந்திக்கடல் இயற்கை வாழ்விடமாகவும், 10,925 ஏக்கர் நிலப்பரப்பு நாயாறு இயற்கை வாழ்விடமாகவும், சுண்டிக்குளம் தேசிய பூங்கா என புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பரிவிலும், சேர்த்து 48,357 ஏக்கர் பிரதேசத்தையுமாக மொத்தம் 69,401 ஏக்கர் பிரதேசத்தை வனஜீவராசிகள் திணைக்களம் தங்களுடைய ஆளுகைக்குள் கொண்டு வந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

## ஜனாதிபதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பேற்று இத்தனை மாதங்கள் கடந்துள்ள போதிலும், ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய ஒருவர் கூட இதுவரை சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

அதுவொருபுறமிருக்கையில், தேசபந்து தென்னகோன்கூட இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. இரவு வேளைகளில் வீடு வீடாகச் சென்று அவரைத் தேடுகின்றனர். அதேபோன்று துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய செவ்வந்தி என்ற சந்தேகநபரும் இன்னும் கைது செய்யப்படவில்லை. ஊழல், மோசடிக்காரர்களை கைது செய்வதாகக் கூறியவர்களுக்கு இவ்வாறான சந்தேகநபர்களைக் கூட கைது செய்ய முடியாத நிலைமையே காணப்படுகிறது.

மேலதிக வகுப்பொன்றில் மாணவனொருனை கொடூரமாக தாக்கிய ஆசிரியரும் இன்று தலைமறைவாகியுள்ளார். இவை அனைத்தையும் புறந்தள்ளி 15ஆம் திகதி காலைகுரங்குகளைபிடிக்குமாறு ஆளும்தரப்பு அறிவித்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளால் ஆளும்தரப்புக் கேலிக்குள்ளாகியுள்ளது. இது ஆளும்தரப்பின் இயலாமையின் வெளிப்பாடு என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும், அவர் தலைமையிலான ஆளும்தரப்பும் தோற்றுப் போயுள்ளன. பொய்களால் ஏமாற்றமடைந்து அதிருப்தியிலுள்ள மக்களை அதிலிருந்து மீட்பதற்கான பணிகளை பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும். அதற்கமைய உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வெற்றியைப்பெற்றுக்கொள்ளும்இயலுமையும் எமக்கிருக்கிறது - என்றார்.

## பணியிடங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும்துன்புறுத்தல்களை இல்லாதொழிப்பது தொடர்பான சர்வதேச தொழிலாளர் அமைப்பு உடன்படிக்கையை விரைவில அங்கீகரிக்க எதிர்பார்த்துள்ளோம்.

இந்த உடன்டிக்கையை இலங்கை இன்னும் அங்கீகரிக்கவில்லையென்றாலும், இதனை அங்கீகரிப்பது குறித்து பரிசீலித்து இது தொடர்பான சட்டங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் .

நாங்கள் இதை ஒரு சட்டமாக அறிமுகப்படுத்தி, பணியிடங்களில்பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வோம், மேலும் பெண்கள் எதிர்கொள்ளும் மன அல்லது உடல் ரீதியான அனைத்து வகையான துஷ்பிரயோகங்களையும்தடுப்போம்என்றார்.

## ஆஸி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் நிலைமைகள் சம்பந்தமாக உரையாடப்பட்டதாக சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்மக்களின் அரசியல் நிலைப்பாடுகள், மத்திய ஆளும்தரப்பின் செயற்பாடுகள் குறித்து உயர் ஆணையர் மற்றும் அதிகாரிகள் கேட்டறிந்துகொண்டனர் என்றார்.

மாலையில் அமெரிக்கத்தூதரகத்தில் அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங்கை சுமந்திரன் சந்தித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்துஅமெரிக்கவெளியேறியுள்ள நிலையில் தமிழ் தரப்பினர் பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றமை தொடர்பில் இந்தச் சந்திப்பில் கருத்துக்கள்பரிமாற்றப்பட்டனஎன்றுகூறினார்.

அத்துடன், நடைபெறும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவதற்கு தீர்மானித்தமைக்கான தொழில்நுட்பக் காரணத்தினையும்அமெரிக்கத்தூதுவரிடத்தில் தெளிவுபடுத்தியதோடு அடுத்தகட்டச் செயற்பாடுகள் தொடர்பாகக் கருத்துக்கள் பரிமாறப்பட்டதாகவும் தெரிவித்தார்.

தமிழ்மக்களின்வேணவாக்களைப்பூர்த்தி செய்வதற்கான பயணத்தில் அமெரிக்காவின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் தொடர்ச்சியாக நீடிக்கும் என்றும் அமெரிக்க தூதுவர் உறுயளித்தார் என்றும் சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்


# செவ்வழி நயனம்

# சைவ சித்தாந்தமும் தமிழ் மரபும் – அறிமுகம்

சைவ சித்தாந்தம் என்பது தமிழ் சமூகத்தின் மைய தத்துவ மரபாக மட்டுமல்லாது, ஒவ்வொரு மனிதரின் ஆன்மீகப் பயணத்தையும் தத்துவ ரீதியாக அமைக்க உதவும் ஒரேசிறந்த ஞான வடிவமாக விளங்குகிறது. சித்தாந்தம் என்ற சொல், முழுமையடைந்த கோட்பாடு அல்லது இறுதி தத்துவம் என்று பொருள் தருகிறது. இத்தத்துவம் பதி (சிவன்), பசு (ஆன்மா), மற்றும் பாசம் (உலகியக் கட்டுப்பாடு) ஆகிய மூன்றையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. பதி என்பது சிவனைக் குறிக்கிறது, யாரின் மூலம் பிரபஞ்சம் தோன்றியது, இயங்குகிறது, மற்றும் முடிவுறுகிறது என்பதைக் கூறுகிறது. இது சிவனை பரம்பொருளாகவும் பிரபஞ்சத்தின் ஆதியாகவும் விளக்குகிறது. பசு, மனித ஆன்மாவாகக் கருதப்படுகிறது, அது பாசத்தால் கட்டுண்டு இருக்கிறது, அதனால் அதன் உயர் இலட்சியமான சிவனுடன் ஒன்றிணைவதை அடைய முடியாத நிலையில் உள்ளது. பாசம் என்பது மாயை, ஆசை, அறியாமை, மற்றும் உலகியலான கட்டுப்பாடுகளை குறிக்கிறது. இதுவே ஆன்மாவிற்கும் சிவனுக்கும் இடையேயான இணைப்பில் உள்ள தடை எனக் கூறப்படுகிறது. சைவ சித்தாந்தம், இந்த மூன்றையும் ஒருங்கிணைத்து, ஆன்மாவின் சிவனுடன் ஒற்றுமை நிலையை அடைவதற்கான வழியைக் காட்டும் மிகப்பெரிய தத்துவமாக விளங்குகிறது.

சைவசித்தாந்தத்தின்அடிப்படைக்கோட்பாடுகளை விளக்க 36 தத்துவங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவைபிரபஞ்சத்தின்தோற்றத்தையும்அதன்இயங்கும் விதியையும் விவரிக்கின்றன. இந்த 36 தத்துவங்கள் மூன்று முக்கிய பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன: சிவ தத்துவம், வித்யா தத்துவம், மற்றும் அசிவ தத்துவம். சிவ தத்துவம் பரம்பொருளான சிவனின் நிலைமையை விளக்குகிறது. சிவன், ஒரே பரமசிவம் அல்லது ஆதி மூலதத்துவமாக விளங்குவதால், இவ்வுலகில் உள்ள அனைத்துக்கும் காரணமாக இருக்கிறார். சக்தி, சிவனின் தன் இயல்பான சக்தியாகும், இது பிரபஞ்சத்தை இயக்கும் சக்தியாகப் பார்க்கப்படுகிறது. இதுவே உலகின் தோற்றத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்குகிறது. வித்யா தத்துவம், ஆன்மாவின் அறிவை ஊக்குவித்து, சிவனுடன் இணைவதற்கான திறனைக் கொடுக்கும் தத்துவமாக விளங்குகிறது. இது ஆன்மாவின் அகில திரவியத்தில் (உடல், மனம்) இருந்து வெளியேறி தன்னை சுத்தமடையச் செய்கிறது. அசிவ தத்துவம் மாயை மற்றும் பாசத்தை எடுத்துக்காட்டுகிறது. இது சிவனின் சக்தியில் இருந்து உருவானதேயாக இருந்தாலும், அது ஆன்மாவுக்கு உள்நோக்கிய தன் உண்மை நிலையை அறியமுடியாத நிலையில் தடை செய்யும் ஒரு பிரமைகளின் அடுக்காக விளங்குகிறது

சைவ சித்தாந்தம் அதனுடைய தத்துவங்களை மட்டும் தங்க வைப்பதில்லை; அது மனிதரின் ஆன்மீக வளர்ச்சியை நடைமுறை வழிகளின் மூலம் உறுதிப்படுத்தும் வகையில் அமைக்கிறது. இதன் வழிபாட்டு முறைகள் ஆன்மா பாசத்திலிருந்து விடுபட்டு சிவனுடன் இணைவதற்கான நடைமுறையாக விளங்குகின்றன. இந்த நடைமுறைகளில் மிக முக்கியமானவை சிவபூஜை, அபிஷேகம், நந்தி வழிபாடு, மற்றும் மந்திர ஓதல்கள் ஆகும். சிவபூஜை, சிவனை அறியமுடியாதவர்களுக்கு உயிரின் உயர் இலட்சியத்தை வெளிப்படுத்தும் வழியாகக் கருதப்படுகிறது. பூஜையின் மூலம் ஆன்மா தன் பாசத்திலிருந்து விடுதலையை அடைய முயற்சிக்கிறது. அபிஷேகம், சிவலிங்கத்தின் மீது புனித திரவியங்களை ஊற்றுவதுஆன்மாவின் பாவங்களை சுத்திகரிக்கும் சடங்காகும். இது ஒருவகையில், ஆன்மா தன் அறியாமையை அகற்றி சிவனின் அருளை அடைவதற்கானமெய்யானஅடையாளமாக விளங்குகிறது.




சைவசித்தாந்தத்தின் கோட்பாடுகளை விளக்கும் வரலாற்றுப் பின்னணியும் அதன் சமய இலக்கியங்களும் இதன் ஆழமான ஆன்மிகத் தரத்தை காட்டுகின்றன. திருவாசகம், பெரியபுராணம், மற்றும் சிவஞான போதம் போன்ற நூல்கள் இதன் கோட்பாடுகளைவிளக்குவதில் மையமான பங்கு வகிக்கின்றன. திருவாசகம்,சிவனுடன் ஆன்மா எவ்வாறு ஒற்றுமை அடைய வேண்டும் என்பதைக் கவிதை வடிவில் விவரிக்கிறது. இதில் மணிக்கவாசகர், மனித ஆன்மாவின் பிரயாசை தனது எழுத்துக்களால் வெளிப்படுத்துகிறார், இது சிவனின் அருளை அடையும்உள்நோக்கம் கொண்டுள்ளது. பெரியபுராணம், நாயன்மார்களின் வாழ்க்கை முறையையும், சிவ வழிபாட்டின் முக்கியத்துவத்தையும் விளக்குகிறது. சிவஞான போதம், சைவ சித்தாந்தத்தின் தத்துவ அடிப்படையை விஞ்ஞானரீதியாகவும் நுண்ணறிவுடன் விளக்குகிறது. இந்த நூல்களின் வாயிலாக, சைவ சித்தாந்தம் தத்துவ ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் பல தலைமுறைகளுக்கும் வழிகாட்டியுள்ளது.

சைவ சித்தாந்தம் தமிழ்ச் சமூகத்தின் ஆன்மீக அடையாளமாக விளங்குவதுடன், அதனுடைய சடங்குகள், தத்துவங்கள், மற்றும் சமூகப் பங்களிப்புகளின் மூலம் மக்களிடம் நெருங்கிய உறவையும் உறுதிப்படுத்தியுள்ளது. இதன் கோட்பாடுகள் மனத்தின் அமைதியையும் ஆன்மீக வளர்ச்சியையும் மட்டுமல்லாமல், வாழ்க்கையின் உள்நோக்கத்தை முழுமையாக புரிந்து கொள்ள வழிகாட்டுகின்றன. அதேசமயம், தற்கால சூழலில், சைவ சித்தாந்தம் சில முக்கியமான சவால்களையும் எதிர்கொள்கிறது. நவீன வாழ்க்கை முறைகள், இளைஞர்களின் உலகியலான சிந்தனைகள், மற்றும் அறிவியல் அடிப்படையிலான வாதங்கள் சைவ சித்தாந்தத்தை ஒரு பாரம்பரிய மரபாக மட்டுமே பார்க்கச் செய்கின்றன. இதை எதிர்கொள்ள சைவ சித்தாந்த குருக்கள், தத்துவங்களை நவீன மொழியில் விளக்கவும், அதை அறிவியல் ரீதியாக ஆதரிக்கும் முயற்சிகளை மேற்கொள்ளவும் வேண்டும்.

சைவ சித்தாந்தத்தின் மரபுகளை மற்றும் கோட்பாடுகளை பராமரிக்க, அதனை நவீன முறைகளில் கல்வி மூலமாக பரப்ப வேண்டும். குறிப்பாக, நவீன தொழில்நுட்பத்துடன் சைவ சித்தாந்த கோட்பாடுகளை இணைத்துக் கொள்ளும் முயற்சிகள் அதை தற்காலத்தினருக்கும் புரிய வைப்பதற்கான அவசியத்தை உருவாக்குகின்றன. மேலும், சைவ ஆலயங்களில்தத்துவ வகுப்புகள் மற்றும் பயிற்சிகளை வழங்குவது இதன் முக்கியத்துவத்தை மேலும் வலுப்படுத்தும். சைவ சித்தாந்தத்தின் ஆன்மீக பங்களிப்பு உலகின் அனைத்து சமூகங்களிலும் மனித ஆன்மீக வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்க வல்லது.

சைவ சித்தாந்தம் தமிழ்ச்சமூகத்தில் மட்டுமல்லாது, உலகளாவிய தத்துவ சிந்தனைகளில் மையமான பங்களிப்பாக விளங்குகிறது. இதன் தத்துவ ரீதியான ஆழமும், ஆன்மீக ரீதியான உயர்வும் மனித வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் உன்னதமான பாத்திரத்தை வகிக்கிறது. இதன் கோட்பாடுகளை பின்பற்றுவதன் மூலம் மனிதனின் அக மற்றும் புற வாழ்க்கையிலும் முழுமையான சமநிலையை உருவாக்க முடியும். அதனை தக்கவைத்துக் கொள்ள கல்வி, ஆராய்ச்சி, மற்றும் உலகளாவிய செயல்பாடுகள் தேவைப்படுகிறது.

**ஜமுனாராணி சிவலோகநாதன்.**

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு – கிழக்கில் நெல் உற்பத்திக்கு வனத்துறை அதிகாரிகளே முக்கிய தடை

## குகதாசன் எம்.பி. குற்றச்சாட்டு

வடக்கு மற்றும் கிழக்கில் வனத்துறை, வனவிலங்குத் துறை அதிகாரிகளும் நெல் உற்பத்தியை அதிகரிக்கத் தடையாக இருப்பதோடு இவர்கள் நாட்டின் நெல் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்னும் அரசின் கொள்கைக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றனரென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கமத்தொழில், கால்நடை அபிவிருத்தி, காணி மற்றும் நீர்பாசனத்துறை அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது -

அரசால் முன்வைக்கப் பட்டுள்ள பாதீட்டில் கமத் தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு மீண்டெழும் செலவுக்காக 83.9 பில்லியன் ரூபாவும் மூலதன செலவுக்காக 133பில்லியன் ரூபாவும் மொத்தமாக 216.9 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 62 பில்லியன் ரூபா அதிகமாகும். இது வரவேற்கத்தக்கது. .

எனினும் விவசாய மற்றும் கால்நடை துறைக்கான ஒதுக்கீடானது கடந்த ஆண்டை விட 2.6 வீதத்தால் குறைக்கப் பட்டுள்ளதோடு இதன் அபிவிருத்திக்கான ஒதுக்கீடு 5.76 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத்திணைக்களத்தின் ஊடான அபிவிருத்திக்கான ஒதுக்கீடானது கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 22.4 ( 6037 மில்லியன் ரூபா ) சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இக்குறைப்புகள் நாட்டின் அரிசி உற்பத்தியில் தன்நிறைவு காணவேண்டும் என்ற அரசின் நோக்கத்திற்கு ஏற்புடையதல்ல.

அண்மைக் காலத்தில் இலங்கையில் அரிசி விலை ஏற்றம், அரிசித் தட்டுப்பாடு ஆகியன முதன்மையான சிக்கல்களாகக் காணப்படுகின்றன. கேள்விக்கு ஏற்ப நிரம்பல் இல்லாதவிடத்து பொருள் விலையேறும் என்பதை அனைவரும் அறிவர்.

அரிசியின் நிரம்பல் குறைவாக இருப்பதே அதன் விலை ஏற்றத்திற்கு முதன்மையான காரணமாகும். ஒரு காலத்தில் அரிசியை ஏற்றுமதி செய்த நாடு



இன்று இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது ? என்பதற்கான மூல காரணத்தை கண்டறிந்து, அதைத் தீர்க்க அரசு முனைய வேண்டும்.

அரிசி உற்பத்திக் குறைவுக்கு வெள்ளம், வரட்சி முதலிய இயற்கைப் பேரிடர்கள் ஒரு காரணமாக இருந்தாலும், திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் போர் காலத்திலே கைவிடப்பட்ட 205 சிறுகுளங்களும் 25 அணைக் கட்டுகளும் மீண்டும் நெற்செய்கைக்கு கொண்டு வரப்படாமல் இருப்பதே முதன்மையான காரணியாகும்.

இவற்றை மீண்டும் நெற் செய்கைக்கு கொண்டு வருவதன் மூலம் ஏறத்தாழ 12,000 ஏக்கர் நிலத்தை நெற் செய்கைக்குள் கொண்டு வர முடியும் இதன் மூலம் 24,000 மெற்றிக் தொன் நெல் உற்பத்தியை அதிகரிக்கவும் இயலும்.

இவ்வாறு நெல் உற்பத்தியை அதிகரிக்கத் தடையாக இருப்பவர்களில் முதன்மையானவர்கள் வனத் துறை அதிகாரிகளும் வனவிலங்குத் துறை அதிகாரிகளும் ஆவர். இவர்கள் வேறு ஒரு நாட்டை கைப்பற்றுவதைப் போல விவசாயிகளது நிலங்களை கைபற்றி விவசாயம் செய்ய விடாமல் தடுத்து வருகின்றனர்.

இவர்கள் நாட்டின் நெல் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்னும் அரசின் கொள்கைக்கு எதிராகச் செயற்படுவோர் போல செயற்பட்டு வருகின்றனர். இவ்விடயத்தில் அமைச்சர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் எனக் கேட்டு கொள்கிறேன்.

திருகோணமலை மாவட்டதில் உள்ள வெருகல் பிரதேச செயலாளர் பிரிவின் பரப்பளவு 32,042 ஏக்கர் ஆகும். இதில் வனவிலங்குத் துறை 25,242 ஏக்கர் நிலத்தை தமக்கு உரியது எனவும் வனத் துறை 11,906 ஏக்கர் நிலத்தை தமக்கு உரியது எனவும் சொந்தம் கொண்டாடி வருகின்றனர்.

மொத்தம் 32,042 ஏக்கர் பரப்பளவு நிலத்தை கொண்ட வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் எப்படி 37,148 ஏக்கர் நிலத்தை கைபற்றினார்கள்? இப்படியான திறமை இந்த நாட்டில் உள்ள வனத்துறை மற்றும் வனவிலங்குத் துறை அதிகாரிகளைத் தவிர உலகில் வேறு யாருக்கும் இருக்க முடியாது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 29,430 ஏக்கர் நிலத்தை வனத்துறை கையகப்படுத்தி வைத்துள்ளது. மேலும் 28,372 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த முனைகிறது. வனவிலங்குத் துறை 7,330 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி உள்ளது.

தொல்பொருள் துறை 1,087 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி உள்ளது. புத்த பிக்குகள் பூஜா பூமி என்ற பெயரில் 3,820 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி உள்ளனர். இதன் மூலம் 1985 ஆம் ஆண்டுக்கு முன்பு மக்கள் விவசாயம் செய்த 70,039 ஏக்கர் நிலம் நெல் உற்பத்தி செய்யாமல் தடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஒரு போகத்தில் 140,000 மெற்றிக் தொன் நெல் உற்பத்தி குறைக்கப்படுறது.

அதேபோல தொல்பொருள் துறையும் மக்கள் விவசாயம் செய்த நிலங்களை தமது எல்லைக் கற்களைப் போட்டுப் பிடித்து வைத்துக்கொண்டு அதனுள் தொல்பொருள் சின்னங்களைக் கண்டுபிடிக்க முடியாமலும் அதேவேளை அதனுள் மக்களை விவசாயம் செய்ய விடாமலும் தடுத்து வருகின்றது . அரசாங்கம் இவ்விடத்தில் விசேட கவனம் செலுத்த வேண்டும். - என்றார்.

# சாளம்பைக்கேணியில் இப்தார்

(ஹாரீஸ்)

நளீர் பவுண்டேஷன் மற்றும் அமெரிக்க சகாத் பவுண்டேஷன் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த மகளிர்களுக்கான இப்தார் நிகழ்வு சாளம்பைக்கேணி முதலாம் வட்டாரத்தில் புதன்கிழமை இடம்பெற்றது.

மகளிர் அமைப்பின் தலைவி ஏ.எம்.சவுதியா தலைமையில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வில் மகளிர் அமைப்பின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் நளீர் பவுண்டேஷன் அமைப்பின் தலைவர் எம்.ஏ.நளீரின் சொந்த நிதியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டதோடு, எதிர்வரும் காலங்களில் மகளிர் அமைப்பின் உறுப்பினர்களுக்கு வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படும்எனத்தெரிவித்தார்.

இந்த இப்தார் நிகழ்வில் அமெரிக்காசகாத்பவுண்டேஷன் அமைப்பின் உறுப்பினர்கள், நளீர் பவுண்டேஷன் உறுப்பினர்கள், உலமாக்கள், மகளிர் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









# சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் பிராந்திய நலனில் முன்னின்று செயற்படும்

## தலைவர் சனூஸ் காரியப்பர் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிராந்தியத்துக்குள், கடந்த காலங்களில் பள்ளிவாசல் நிர்வாகங்கள் செயற்பட்டதை அடிப்படையாக வைத்து; காலத்துக்கு ஏற்றவாறு மாற்றங்களைச் செய்து தங்களது புதிய அணி பணியாற்றும் என, கல்முனை மாநகர சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் தலைவர் வைத்தியர் எம்.எச். சனூஸ் காரியப்பர் தெரிவித்தார்.

சாய்ந்தமருது மற்றும் மாளிகைக்காடு பிரதேசங்களின் தனவந்தர்களால் பைத்துஸ் ஸக்காத் நிதியத்துக்கு வழங்கப்பட்ட சுமார் 73 லட்சம் ரூபாக்கள் பொறுமதியான உபகரணங்கள் மற்றும் பணங்களை 103 பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வு 2025.03.13 ஆம் திகதி பைத்துஸ் ஸக்காத் நிதியத்தின் தலைவர் அஷ்செய்க் ஐ.எல்.எம். ரௌபி (ஹிளிரி) தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே சனூஸ் காரியப்பர் மேற்படி கருத்துக்களை முன்வைத்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர், அம்பாறை மாவட்டத்தின் அபிவிருத்திகளுக்கு பொறுப்பாகவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவின் முயற்சியின் பயனாக பல்வேறு துறைகளையும் சார்ந்த 42 பேர் இடைக்கால சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். குறித்த அங்கத்தினர்களிடையே சுமூக அடிப்படையில் புதிய நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றோம். எங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட புனித பணியை பிராந்திய மக்களின் பங்களிப்புடன் முன்கொண்டு செல்ல ஆயத்தமாகி வருகின்றோம்.

பல்வேறு சந்திப்புக்களை ஏற்படுத்தி தேவைகளையும் பிரச்சினைகளையும் அடையாளம் கண்டு வருகின்றோம். அத்துடன் இனம்காணப்பட்ட பிரச்சனைகளை கையாள்வதற்கு பல குழுக்களையும் ஏற்படுத்தியுள்ளோம் அவைகளினூடாக முடிந்த அளவு மக்களின் பங்களிப்புடன் முன்கொண்டு செல்வோம் என்றும் தலைவர் டொக்டர் சனூஸ் காரியப்பர் தெரிவித்தார்.

பைத்துஸ் ஸக்காத் நிதியத்துக்கு மேலும் நிதிகளை சேகரிக்கும் பொருட்டு சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தின் தலைவரும் சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் உப தலைவருமான எம்.எஸ். முபாறக் மற்றும் நஸீர் மார்கட்டின்க் நிறுவனத்தின் உரிமையாளர் எஸ்.எச். நஸீர் ஆகியோர் ஒருதொகை பணத்தை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜம்மியத்துல் உலமாவின் தலைவர் ஏ.எம் சலீம் (சர்கி), சாய்ந்தமருது ஜும்ஆ பெரியபள்ளிவாசலின் செயலாளர் எந்திரி எம்.எம்.எம். முனாஸ், பள்ளிவாசலின் பொருளாளர் முஸ்தபா, மற்றும் பள்ளிவாசலின் நிர்வாக சபை உறுப்பினர்கள், பைத்துஸ் ஸக்காத் நிதியத்தின் செயலாளர் யூ.எல்.எம். ஹனிபா, பொருளாளர் யூ.எல்.எம். ஹனிபா, பணிப்பாளர் எம்.ஐ.எம். அஷ்ரப் உள்ளிட்டவர்களுடன் உதவிகளைப்பெற்ற பயனாளிகளும் கலந்து கொண்டிருந்தனர்.








காலைக்கதிர் Kalaikkathir

# உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் பொது போக்குவரத்து சட்டத்தின் அமுல்படுத்தல்

## கல்முனையில் கலந்தாய்வு

(பாறுக் ஷிஹான்)

கல்முனை தலைமைய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுப் போக்குவரத்திற்கு இடையூறு செய்பவர்கள் உட்பட அதிக ஒளி மற்றும் ஒலி எழுப்பும் மோட்டார் சைக்கிள் பயன்படுத்தும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதிகளில் ஏற்பட்டுள்ள வீதி போக்குவரத்து சீர்கேடு கலாசார சீர்கேடு உள்ளிட்டவைகள் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் பங்கேற்புடன் ஆரம்பமானது.

இதன்போது கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர், சமூகப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான ஏ.எல்.ஏ.வாஹிட் ,கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான பி.ரி.நஸீர், உட்பட கல்முனை மாநகர பகுதியில் உள்ள அம்மன் கோயில் வீதி ,ஆர். கே. எம். வீதி ,உடையார் வீதி ,பொதுமக்கள், சிவில் பாதுகாப்பு அங்கத்தவர்கள், வர்த்தக உரிமையாளர்கள், பிரத்தியேக வகுப்பு உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோவில் பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பிக்கும் போது அல்லது முடிவடையும் போது பெண் பிள்ளைகளுக்கு தொந்தரவு செய்யும் குறித்த நபர்கள் பற்றிய தகவல்கள் தெரிந்தால் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கவுமாறும் குறித்த விடயம் தொடர்பில் தகவல் தருபவரின் இரகசியம் பாதுகாக்கப்படும் என இக்கலந்துரையாடலில் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அண்மைக் காலமாக மோட்டார் சைக்கிள்கள் திருடுதல் பொதுப் போக்குவரத்தை சீர்குலைத்தல் சட்டவிரோதமாக பொதுப்போக்குவரத்திற்கு பங்கம் விளைவித்தல் தான்தோன்றித்தனமாக வாகன தரிப்பு செய்தல் வர்த்தக நிலையங்களின் விளம்பர பலகைகளை பிரதான வீதியின் நடைபாதையில் காட்சிப்படுத்துவதை தவிர்த்தல் சட்டவிரோதமாக குப்பைகளை கொட்டுதல் கல்முனை மாநகரப் பகுதியில் மீண்டும் வழமை போன்று ஒரு வழிப்பாதையை மீண்டும் உருவாக்குதல் நீர் தங்கி காணப்படும் வீதிகளை இனங்கண்டு சீர் செய்தல் கலாசார சீரழிவுகளைத் தடுப்பதற்கான பொறிமுறைகள் கட்டாக்காலி மாடுகள் நாய்களை கட்டுப்படுத்தல் உள்ளிட்டவைகள் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டன.

மேலும் பல்வேறு திருட்டுச் சம்பவம் மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் பற்றிய தகவல்





தெரிந்தால் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்குமாறும் குறித்த விடயம் தொடர்பில் தகவல் தருபவரின் இரகசியம் பாதுகாக்கப்படும் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தை தொடர்பு கொண்டு குறித்த சந்தேக நபர்கள் பற்றிய தகவலை அறிவிக்குமாறும் கேட்டுள்ளார்.




காலைக்கதிர் Kalaikkathir

# ஊடகவியலாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு ஸ்ரீ லங்கா மீடியா போரத்தின் ஏற்பாட்டில் வழங்கல்

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கான விஷேட நலன்புரி வேலைத் திட்டத்தின் கீழ் 'ஊடகவியலாளர்கள் நாம் நேசத்தால் ஒன்றிணைவோம்! குரலற்றவரின் குரலாவோம்' எனும் தொனிப்பொருளில் ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) ஓட்டமாவடி பிரதேச சபைமாநாட்டுமண்டபத்தில் போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம்.பாரீஸ் தலைமையில் நடைபெற்றது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மிக்க சூழலிலும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் செய்தி சேகரிப்பு பணியில் ஈடுபட்டு மக்களின் செய்திகளை சமூகப் பொறுப்போடு சம்பந்தப்பட்டவர்களுக்கு கொண்டு செல்லும்பல்வேறு ஊடகங்களில்பிராந்திய செய்தியாளர்களாக களப் பணியாற்றும் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலைமையை கருத்தில் கொண்டு நாடளாவிய ரீதியில் இன, மத வேறுபாடின்றி பல்வேறு மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வரும் தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவரும்சமூகசெயற்பாட்டாளருமான 'சமூகஜோதி' வாமதேவன் தியாகேந்திரன் அவர்களிடம் ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமானஎம்.ரீஎம்.பாரிஸ் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களாக களப்பணி யாற்றும் தெரிவு செய்யப்பட்ட இருபது தமிழ்முஸ்லிம்ஊடகவியலாளர்களில்முதல் கட்டமாக 10 ஊடகவியலாளர்களுக்கு அவர்களை ஊக்கப்படுத்தும் முகமாக தலா பத்தாயிரம் ரூபாய் (10,000) வீதமும் சென்ற வருடம் இவ்வாறு ஊக்குவிப்புத் தொகையினை பெற்றுக்கொண்ட 10 ஊடகவியலாளர்களுக்கு 5000 ரூபா வீதமும் அன்பளிப்பு தொகை வழங்கி வைக்கப்பட்டது.





ஊடகவியலாளர்களுக்கான நலன்புரி விஷேட வேலைத்திட்டத்தின்கீழ் ஸ்ரீலங்கா மீடியா போரம் கிழக்கு மாகாணத்தில் பலதரப்பட்ட இனங்களுக்கிடையில் பன்மைத்துவம் மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

இந் நிகழ்வில் ஓட்டமாவடி கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் ஏ.தாஹிர், கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.பீர்முஹம்மட், ஓட்டமாவடி பிரதேச சபையின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எஸ்.எம். நௌபர் உள்ளிட்ட சிரேஷ்ட மற்றும் இளம் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன் அடிப்படையில் கடந்த வருடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 45 தமிழ்,முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரனின் உதவியுடன் ஸ்ரீலங்காமீடியாபோரத்தால் ஊக்குவிப்பு தொகைகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆதரவற்ற தெரு நாய்களை யாழில் வளர்க்கும் குடும்பம்

யாழ்ப்பாணம் சங்கானை பகுதியில் வசித்துவரும்குடும்பம்தெருவோரங்களில் ஆதரவற்று நிற்கும் நாய்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று வளர்த்து வருகின்றனர்.

ஆரம்பத்தில் இரண்டு நாய்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த பணியானது தற்போது 39 நாய்கள் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அவர்கள் நாய்களை தங்களது சொந்த பிள்ளைகள் போலவே வளர்த்து வருகின்றனர்.

அயல் வீட்டில் வசிக்கும் நபர் ஒருவர், குறித்த குடும்பத்தினரால் வளர்க்கப்படுகின்ற நாய் ஒன்றின் மீது தாக்குதல் நடத்திய நிலையில், அயல் வீட்டில் வசிக்கும் நபருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்துள்ளனர்.

அத்துடன், அவர்களது நாய்கள் காணாமல்போகின்ற சந்தர்ப்பங்களில் ஜோசியம் பார்த்தல், சமூக ஊடகங்கள் மூலம் பதிவுகளை பகிர்தல் ஆகியவற்றின் மூலம் நாய்களை கண்டுபிடிக்கின்றனர்.

குறித்த குடும்பத்தின் தலைவர் எதிர்வரும்காலங்களில்நாடளாவியரீதியில் நடைபயணம் ஒன்றினை மேற்கொண்டு, பலரது கையொப்பங்களை பெற்று நாய்களின்பாதுகாப்புக்கானசட்டங்களை இயற்றுவதற்கு ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைக்கவுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.





# ஆசிரியர் வீடுடைத்துத் தங்க நகைகள் புதுக்குடியிருப்பில் பட்டப்பகல் திருட்டு

## இளைஞன் கைது

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியில் பட்டப்பகலில் வீடு உடைத்து திருடிய குற்றச்சாட்டில் இளைஞர்ஒருவர்புதன்கிழமைகைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியில் ஆசிரியர் ஒருவரின் வீட்டினை உடைத்து 6,10,000 ரூபா பெறுமதியான தங்கநகைகள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றிருந்தது. அதனையடுத்து குறித்த சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதனையடுத்தே புதன்கிழமை குறித்த திருட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஏறாவூர், மட்டக்களப்பில் வைத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி அஜித் தலைமையில் பொலிஸ் கொஸ்தாபல்களான குமார, கவிராஜ், அர்ஜன் ஆகிய பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பருத்தித்துறை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் புதன்கிழமை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# பனை அபிவிருத்திச் சபை தலைவரிடம் குற்றப்புலனாய்வுத்துறை வாக்குமூலம்

(சுபேசன்)

பனை அபிவிருத்திச் சபையின் கடந்த கால ஊழல்-மோசடிகள் தொடர்பாக நாடாளுமன்ற கோப் குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு வியாழக்கிழமை பனை அபிவிருத்திச்சபையினுடைய தற்போதைய தலைவர் வி.சகாதேவனிடம் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பணியகம்இரண்டுமணிநேரம்வாக்குமூலம்பெற்றுள்ளனர்.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைத்தலைவர் வி.சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்; -

கடந்த காலங்களில் பனை அபிவிருத்திச்சபையில் இடம்பெற்ற பல்வேறு ஊழல்-மோசடிச் சம்பவங்கள், சபையின் ஆவணங்கள் மறைக்கப்பட்ட மற்றும் எரித்து அழிக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக சபையின் தற்போதைய தலைவர் என்ற அடிப்படையில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பணியகத்திற்கு என்னை அழைத்திருந்த நிலையில் என்னிடம் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக அந்த விடயங்கள் தொடர்பாக வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

கடந்த காலத்தில் பனை அபிவிருத்திச்சபையில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பாக நாடாளுமன்ற கோப் குழுவிற்கு கிடைக்கப்பெற்ற அறிக்கையின் அடிப்படையிலேயே கொழும்பு குற்றப்புலனாய்வுப் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில்சமாசங்கள்மற்றும்கொத்தணிகளுக்குச் சொந்தமான இரு வடிசாலைகள் கடந்த காலத்தில் தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டிருந்தன.

அதனை மீட்டுத் தருமாறு பொதுமக்கள் போராடி வரும் நிலையில் இவ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திக்கம் வடிசாலையை இயக்க விடாமல் சில சக்திகள் தடுத்து வரும் நிலையில் புதிய அரசாங்கத்தின் ஊழலுக்கு எதிரான செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக கருதப்படும். பனை அபிவிருத்திச் சபையின் கடந்த கால ஊழல்கள் தொடர்பாகவிசாரணைநிச்சயமாகஒருதிருப்புமுனையை ஏற்படுத்தும்.

மறைக்கப்பட்ட பல உண்மைகள் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. - என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# சாய்ந்தமருதில் ஸகாத் வழங்கும் நிகழ்வு



(ஸாகிர்)

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரியபள்ளிவாசல்பைத்துஸ்ஸகாத்நிதியத்தால் இவ்வாண்டும் (2025) பைத்துஸ்ஸகாத் வழங்கும் நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) சாய்ந்தமருது பள்ளிவாசலில் இடம்பெற்றது.

பைத்துஸ்ஸகாத் நிதியத்தின் தலைவர் மௌலவிஐ.எல்.எம்.ரஃபி (ஹிழ்ரி)யின்தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசலின் புதிய

நம்பிக்கையாளர் சபைத் தலைவர் டாக்டர் எம்.எச். சனூஸ் காரியப்பர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில், பைத்துஸ் ஸகாத் செயலாளர் ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர் யூ.எல்.எம். ஹனீபா, பொருளாளர் பிரதேச செயலக ஓய்வுபெற்ற நிதி உதவியாளர் யூ.எல்.எம். ஹனீபா, உப செயலாளர் எம்.சி.எம். அன்வர், பைத்துஸ்ஸகாத் பணிப்பாளர் எம்.ஐ.எம். அஷ்ரப், பைத்துஸ் ஸகாத் உறுப்பினர்கள், சாய்ந்தமருது - மாளிகைக்காடு நம்பிக்கையாளர் சபையின் செயலாளர் பொறியியலாளர் எம்.எம்.எம். முனாஸ், பொருளாளர் ஏ.எல்.எம்.முஸ்தபா, உப தலைவர் எம்.எஸ்.எம். முபாரக், உப பொருளாளர் எம்.ஐ. நஜீம் மற்றும் புதிய, பழைய நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் பைத்துஸ் ஸகாத்தில் பணிபுரியும் ஏ.ஏ.சமட் உட்பட பயனாளிகளும் கலந்துகொண்டனர்.





இந்நிகழ்வில், சாய்ந்தமருது - மாளிகைக்காட்டிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 103 பயனாளிகளுக்கு இதன்போது 73 லட்சம் ரூபா பணம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அத்துடன் சிறு கைத்தொழிலுக்காக 4 மாவு இடிக்கும் இயந்திரங்களும் 2 தையல் இயந்திரமும் கையளிக்கப்பட்டதுடன் அண்மையில் நெல்மூடைகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதன்போது சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசலின் புதிய நம்பிக்கையாளர் சபையின் உபதலைவரும் ஜம்இய்யத்துல் உலமா சபை சாய்ந்தமருது - மாளிகைக்காடு கிளையின் தலைவருமான மௌலவி அஷ்ஷேக் எம்.எம்.எம்.சலீமால் ஸகாத் பற்றி விசேட பயான் சொற்பொழிவு இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.03.2025இல் வெளியிடப்பெற்றது